# தமிழில்

## அடிக்கடி நேரும்

# பிழைகளும் திருத்தமும்

தமிழண்ணல்

# தமிழில்
# அடிக்கடி நேரும் பிழைகளும்
# திருத்தமும்

தமிழண்ணல்

விற்பனையுரிமை

**மீனாட்சி புத்தக நிலையம்**

*48, தானப்ப முதலி தெரு, மதுரை - 1*



மழலையர் முதல் ஐந்தாம் வகுப்பு முடிய அனைத்துப் பள்ளிகளிலும் தமிழே பாடமொழியும் பயிற்றுமொழியும் ஆகச் சட்டத்தின் மூலம் கட்டாயப்படுத்தப்படவேண்டும்.

மருத்துவம், பொறியியல், அறிவியல் உட்பட உயர்கல்வி அனைத்தும் தமிழிலும் தரவேண்டும். தமிழ்வழி உயர்கல்விக்குத் தனிப்பல்கலைக் கழகம் தொடங்க வேண்டும்.

தமிழே முழுமையான ஆட்சிமொழியாக வேண்டும். தமிழ் கற்றவர்க்கும் தமிழ் வழி கற்றவர்க்கும் தமிழகத்தில் வேலை வாய்ப்பும் ஊதிய உயர்வும் பதவியுயர்வும் தரவேண்டும்.

தமிழர் கட்டிய திருக்கோயில்களிலும் தமிழர் சடங்குகளிலும் இசையரங்குகளிலும் தமிழே பயன்பாட்டு மொழியாக வேண்டும்.

நடுவணரசு தமிழைச் செவ்வியல் மொழி என அறிவித்து, அதன் வளர்ச்சிக்கு உதவ வேண்டும். தேசிய மொழிகளில் ஒன்றாகிய தொன்மைமிக்க தமிழைப் பாராளுமன்ற நடைமுறை மொழியாக ஏற்கவேண்டும். திருக்குறள் இந்தியத் தேசியநூலாக அறிவிக்கப்பட வேண்டும். தாய்த்தமிழ்ப் பள்ளிகள் தழைக்க வேண்டும். உலகத் தமிழினம் ஒன்றுபட வேண்டும்.

**தமிழண்ணல்**

தமிழ்அடிசூடி

முதற்பதிப்பு : செப்டம்பர், 2002
(கன்னி)புரட்டாசி, தி.வ.ஆண்டு 2033
பதிப்புரிமை : ஆசிரியர்க்கு

**தமிழண்ணலின் பவளவிழா வெளியீடு**

**விலை : ரூ. 20.00**

நூலைப் பற்றி

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தமிழில் அடிக்கடி நேரும் பிழைகளும் திருத்தமும் |
| ஆசிரியர் பெயர் | : | தமிழண்ணல் |
| முதற்பதிப்பு | : | செப்டம்பர், 2002 |
| தாளின் தன்மை | : | வெள்ளைத்தாள் |
| நூலின் அளவு | : | 18 x 12.5 செ.மீ. |
| மொத்த பக்கங்கள் | : | 80 |
| நூலின் விலை | : | ரூ. 20.00 |
| அச்சிட்டோர் | : | ஹேமமாலா சிண்டிகேட் |
| ஒளி அச்சுக் கோர்வை | : | ஐ கேட்சர், மதுரை |

வெளியீடு

**உலகத் தமிழர் தேசியத் தமிழியக்கக் கல்விக் கழகம்**

**The World Tamils National Institute of Tamil Movement**

தமிழ் அறிவோம்
தமிழராய் வாழ்வோம்
தமிழை அறிந்தவரே தமிழராவார்

தமிழ்ப் பொதுமக்களைத் தமிழுணர்வு, தமிழ்க்கல்வி, தமிழிலக்கிய அறிமுகம் எதுவுமின்றி ஒதுக்கிவைத்து, நாமே விழாக் கொண்டாடி, நம்மையே வெளிப்படுத்தி, நம் நலம் காத்துத் தமிழ் நலம் விடுத்தோம்.

இதனால் தமிழுணர்ச்சி மங்கிவிட்டது, தமிழ்க் கல்வி தோற்றுவிட்டது; தமிழிலக்கியம் புறக்கணிக்கப்பட்டுவிட்டது.

இன்று தமிழ், தமிழினப் பகை ஆட்டம் போடுகிறது. தமிழையே அழிக்கச் சதித்திட்டம் தீட்டுகிறது. தமிழில் பேசி, தமிழில் எழுதி, தமிழால் வருமானம் பேர் புகழ் பெற்று, தமிழ் மண்ணில் வாழ்ந்து, தமிழ் நிலத்து நீரைப் பருகியும், தம்மை வாழவைக்கும் தமிழையும் தமிழினத்தையும் அழிக்கச் சூழ்ச்சிவலை விரிக்கிறது.

ஏழாம் நூற்றாண்டையும் பதினேழாம் நூற்றாண்டையும் போலத் தமிழியக்கத்தை, மக்களியக்கமாக மாற்றாவிட்டால், தமிழும் தமிழினமும் நிலைபெறா.

இந்நூலால் தமிழில் **'பிழைதிருத்தும் மனப்பழக்கம்'** உண்டாகும். தமிழ்க்கல்வி வளரும். தமிழுணர்வு எழுச்சிதரும்.

**தினமணியில்** 1980-களில் யான் எழுதியவற்றில் தேர்ந்தெடுத்தவை இவை. இந்நூல்கள் ஆசிரியர்கள், மாணவர்கள், மக்கள் அனைவருக்கும் ஒல்லும் வகையாலெல்லாம் பயன்படும்.

மனப்பாடம் செய்ய வற்புறுத்துங்கள்; போட்டிவைத்துப் பரிசு நல்குங்கள்; பாடநூலாகப் பயன்படுத்துங்கள்; ஒரு கதைப் புத்தகத்தைப் படிப்பது போலவும் படியுங்கள்.

இந் நூல்வரிசை தொடர்கிறது.

தமிழண்ணல்
தமிழ் அடிசூடி

## திருத்தம் பெற்ற சொற்கள்


| | சொல் எண் |
|---|---|
| 1. அடைமானம் | 57 |
| 2. அடையாறு | 9 |
| 3. அருகில் | 28 |
| 4. அருவருப்பு | 48 |
| 5. அன்றியும் இன்றியும் | 51 |
| 6. அன்று, அல்ல | 50 |
| 7. ஆத்திசூடி | 1 |
| 8. ஆர்க்காடு | 20 |
| 9. இயக்குநர் | 5 |
| 10. உடம்பாடு | 60 |
| 11. உடைமை | 56 |
| 12. உயருமா, கூடுமா? | 19 |
| 13. என்றன் | 49 |
| 14. ஐந்நூறு | 54 |
| 15. ஒருகால் | 42 |
| 16. கரியும் கறியும் | 52 |
| 17. கருப்பு | 44 |
| 18. காஞ்சிபுரம் தமிழைக் காக்கட்டும் | 34 |
| 19. காந்தியம் | 36 |
| 20. கைம்மாறு | 24 |
| 21. சிலை திறப்பு | 41 |
| 22. சிவப்பு | 43 |
| 23. சுப்பிரமணியன் | 16 |
| 24. சுவர் | 12 |
| 25. செய்ந்நன்றியறிதல் | 26 |
| 26. செலவு | 32 |
| 27. செல்வர் | 7 |
| 28. தமிழைப் பொறுத்தவரை | 18 |
| 29. தடைப்படாமல் தமிழ் வளர்க | 38 |
| 30. திருவளர்செல்வி | 3 |

| | சொல் எண் |
|---|---|
| 31. திருவேங்கடத்தான் | 17 |
| 32. தேசியம் | 37 |
| 33. தேநீர் | 47 |
| 34. நற்றமிழ் | 14 |
| 35. நாகரிகம் பேணுவோம் | 35 |
| 36. நாள்கள் | 30 |
| 37. நினைவுகூர்தல் | 6 |
| 38. நூல்கள் | 8 |
| 39. நெற்பயிரும் கற்கோயிலும் | 15 |
| 40. பதற்றம் | 11 |
| 41. பதிப்பாசிரியர் | 13 |
| 42. பழமுதிர்சோலை | 4 |
| 43. பழனி முருகன் காக்க | 40 |
| 44. பழைமையும் பழமையும் | 55 |
| 45. பன்னிரண்டு | 45 |
| 46. பிழைதிருத்தம் | 23 |
| 47. பிட்டுத்திருவிழா | 53 |
| 48. புழைக்கடை | 58 |
| 49. பெரியாறு | 10 |
| 50. பொருள்கள் | 29 |
| 51. மனம் | 22 |
| 52. மடைப்பள்ளி | 59 |
| 53. மாமல்லபுரம் | 46 |
| 54. முயல்வோம், முயற்சிக்கல் ஏன்? | 33 |
| 55. மெய்ம்மையும் பொய்ம்மையும் | 27 |
| 56. மேன்மேலும் | 39 |
| 57. வயிறார | 21 |
| 58. வாழ்க வளமுடன் | 31 |
| 59. வாய்பாடு | 2 |
| 60. விளக்குமாறு | 25 |

# அடிக்கடி நேரும் பிழைகளும் திருத்தமும்

## 1 ஆத்திசூடி

ஔவையார் பாடியது ஆத்திசூடி. ஆத்தி மாலை சிவபெருமானுக்குரிய மாலைகளில் ஒன்று. **'ஆத்தியைச் சூடிய சிவபெருமான்'** என்பது பொருள்.

ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே

ஆத்தி மாலையைச் சூடிய சிவபெருமானால் விரும்பப்பட்ட (அமர்ந்த) பிள்ளையாரை (தேவனை), ஏத்தி ஏத்தி (மேன்மேலும் புகழ்ந்து) யாம் வணங்குவோமாக.

இந்நூலை 'ஆத்திச்சூடி' எனச் சொல்வதும் எழுதுவதும் தவறு. **'செந்தமிழாக எழுதுவதாக நினைத்துச் செய்யும் பிழை அது'.**

கையைத் தட்டு - 'த்' வரும். கைதட்டு - 'த்' வராது
சிலையைச்செய் - 'ச்' வரும். சிலைசெய் - 'ச்' வராது
ஆத்தியைச்சூடி - 'ச்' வரும். ஆத்திசூடி - 'ச்' வராது

இனி எந்நாளும் 'ஆத்திசூடி' என்றே உணர்வோம்; ஒலிப்போம்; எழுதுவோம்.

## 2 வாய்பாடு

தமிழில் சிறார்களுக்கு ‘வாய்பாடு’ என ஒரு சிறுநூல் தரப்பட்டு, அது மனப்பாடம் செய்யுமாறு வற்புறுத்தப்படும். நானான்கு பதினாறு; நாலைந்து இருபது; நாலாறு இருபத்து நான்கு - என இவ்வாறு, முறைவைத்து எல்லோரும் சேர்ந்து சொல்வர். மனப்பாடம் செய்து ஒப்பிக்க வேண்டும். இதைத் தமிழில் கற்கக் கற்க, கணக்குப் பாடம், சிறுவர் குருதியிற் கலக்கும்; நினைவில் நிலைக்கும். முன்னர் வாயால் முறைவைத்துச் சொல்லிப் பழகியதால் வாய்பாடு ஆனது. பிறகு முன்மாதிரி அனைத்திற்கும் பெயரானது. வாய்பாடு படித்தவர்கள் கணித மேதைகளாயினர்.

வாய்பாட்டை மாந்தர்தம் வாய்மொழியாகச் சொல்லிப் படிப்பதால், அது கணினியைவிட நம்பகமானது, அது ஒரு முன்மாதிரி, முன் எடுத்துக்காட்டு ஆகும். கணிதம், பாட்டெழுதும் யாப்பு, அறிவியல், பொருளியல் போன்றவற்றில் முன் மாதிரியாய், வழிகாட்ட வரும் வரையறை விதிகள் (Formula) வாய்பாடு எனப்படும். இவ்வாறு பலவகை வாய்பாடுகளும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய முன் மாதிரிகள் ஆகும்.

எந்த ஒரு வாய்பாட்டையும் நெட்டுருச் செய்ய வேண்டும். அதாவது மனப்பாடம் செய்து நினைவில் வைத்திருக்க வேண்டும்.

இதை ‘வாய்ப்பாடு’ என எழுதுவது பிழை. பானைக்கு மேலேயுள்ள அதன் ‘வாய்’ப்பகுதியை, உலக

வழக்கில் 'வாய்ப்பாடு' என்பர். இசையில் வாய்ப்பாட்டுக்கே முதலிடம் தருவர்.

வாய்பாட்டில், இடையே 'ப்' வரக்கூடாது. வாய்பாடு வேறு; வாய்ப்பாடு வேறு. இதை வாய்பாடு என்றே தெரிந்துகொள்வோம்; அவ்வாறே சொல்வோம்; எழுதுவோம். பெருக்கல் வாய்பாடும் வகுத்தல் வாய்பாடும் தமிழிலேயே சொல்லித் தருவோம்.

## 3 திருவளர் செல்வி

திருமண அழைப்பை எழுதும்போது, அடிக்கடி ஏற்படும் ஐயம் இது. வளர்செல்வியா? வளர்ச்செல்வியா? திருவளர்செல்வன் முருகப்பனுக்கும் திருவளர்செல்வி வள்ளியம்மைக்கும் திருமணமென எழுதவேண்டும். வளர் செல்வன், வளர் செல்வி என்றால், என்றென்றும் வளரும் செல்வர்கள் எனப் பொருள்படும்.

இதற்குக் கால எல்லை கிடையாது. வளர்ந்த, வளர்கின்ற, வளரும் என முக்காலத்திற்கும் பொருந்தும். இதை வினைத் தொகை என்பது இலக்கணம். 'திருவளர்ச் செல்வி' என எழுதுவது தவறு. 'ச்' இடையே வரக்கூடாது. வளர்ச்சி தடைப்படும்!

திருவளர்செல்வன், திருவளர்செல்வி என்றும் திருநிறைசெல்வன், திருநிறைசெல்வி என்றும் திருத்தமாக எழுதி, நம் பிள்ளைகள் செல்வச் செழிப்புடன் என்றென்றும் வளர வழிவகுப்போமாக!

## 4 பழமுதிர்சோலை

பழக்கடைகளுக்குப் 'பழமுதிர்சோலை' என்று இன்று, அழகான பெயர் வைக்கின்றார்கள். கோயமுத்தூரில் தொடங்கிய இப்பெயர், இன்று நாடெங்கும் பரவியுள்ளது. பழங்கள் தோன்றி முதிர்கின்ற, என்றென்றும் கிடைக்கும்படியான சோலை அது. பழம் முதிர்ந்தால் கனியாகும். பூக்களும் காய்களும் பழங்களும் பழங்கள் முதிர்ந்த கனிகளும் உள்ள சோலையாதலின் அவை அனைத்தையும் உள்ளடக்கிப் 'பழமுதிர்சோலை' என்றனர்.

இதைப் 'பழமுதிர்ச்சோலை' எனத் தவறுதலாகச் சிலர் எழுதிவிடுகின்றனர். அது கூடாது; இடையே 'ச்' வராது. முக்காலத்திற்கும் உரிமைகூறும் இதில் 'இச்சுப்' போட்டுச் சுருக்கவேண்டாம். இலக்கணத்தில் இதுவும் 'வினைத்தொகை' எனப்படும். முதிர்கின்ற, முதிரும், முதிர்ந்த என முக்காலத்திற்கும் உரியது இது.

'பழமுதிர் சோலை மலை கிழவோனே' என்று, திருமுருகாற்றுப்படையை, நக்கீரர் முடிப்பார். முருகன் என்றும் இருக்கும் இடம் அது என்பதால் உரிமையுடையவன் எனும் பொருளில் கூறியுள்ளார். கிழவோன் உரிமையுடையவன். முருகனது படைவீடுகளில், ஆறாம் படைவீடு இது. மதுரைக்கு அருகிலுளது. அழகான பெயர்; தவறாமல் பயன்படுத்துவோம். பழமுதிர் சோலை முருகன் தமிழ்க் கடவுள். தமிழைப் பிழையின்றி எழுத, அவனருளை வேண்டுவோம்.

## 5 இயக்குநர்

பள்ளிக் கல்வி இயக்குநர், படக்கலை இயக்குநர், துறைகள் சார்ந்த இயக்குநர்கள் என்று இன்று நாடு முழுவதும் பல்வேறு துறைகளில் இயக்குநர் தொகை பெருகிவருகிறது.

இயக்குநர் மட்டுமன்று; பேருந்தை ஓட்டுநர், அதை நடத்துநர், கூட்டத்தில் பேசுநர், மேடையில் பாடுநர், வல்லுநர் குழு - இவ்வாறு பெருகுநர் பலர்.

இயக்குநரகம் ஒவ்வொரு துறைக்கும் உண்டு. இயக்குபவன் ஒன்றை நடத்துகின்ற - இயக்குகின்ற வழிகாட்டி - தலைவன் - மேலாண்மையன் ஆவான். இயக்கினன், ஓட்டினன், நடத்தினன் என்பன வினைச்சொற்கள். ஒரு வினையை - செயலை - இயக்குபவன், ஓட்டுபவன், நடத்துபவன் எனப்பெயர்த் தன்மைப்படுத்தும்போது இயக்குநன், நடத்துநன், ஓட்டுநன், பேசுநன் என்றே வரும். தந்நகரம் (ந) கட்டாயம் போடவேண்டும்.

இவற்றை இயக்குனன், நடத்துனன், ஓட்டுனன் என்பன போல, 'ன' கரத்தைப் போட்டுப் பலர் எழுதிவிடுவது தப்பு. இது ஒருவரைப் பார்த்து ஒருவர், தப்புத்தப்பாய்ச்செய்யும் பெருந்தப்பு. வினைச்சொல்லைப் பெயர்த்தன்மைப்படுத்தும் போது 'நகர'த்தைப் போடுவது - 'ந' எழுத்தைப் போடுவது, தமிழ்மரபு. பொருநன் (போர் செய்பவன், ஒருவரைப் போல் வேடமிட்டு நடிப்பவன்), மகிழ்நன் (மகிழ்பவன், மருத நிலத்தலைவன்) மற்றும் உசாவுநர் (உசாவுவோர், நலம் விசாரிப்போர்), கேட்குநர் (சொல்வதைச் செவியால் கேட்பவர்) என

இவ்வாறு வினைகள் பெயர் வடிவமாக ஆக்கப்பட்டு வந்துள்ளன. சங்க காலந்தொட்டு வரும் மரபு இது.

இதனை அறியுநர், ஆய்குநர், ஆர்வம் காட்டுநர் அனைவரும் இயக்குநர், ஓட்டுநர், நடத்துநர் என்றே தடுமாற்றமின்றி எழுதுவார்களாக! அங்ஙனம் 'எழுதுநரே' தமிழ் 'அறியுநர்' ஆவர்.

## 6 நினைவுகூர்தல்

நாட்டு விடுதலைக்குப்பாடுபட்டவர்களை நினைவு கூர்கிறோம். மொழிப்போர்த் தியாகிகளை நினைவுகூர்ந்து, தமிழைப் பிழையின்றி எழுதவேண்டும். சான்றோர்களை அவர்களின் இறந்த நாளன்று நினைவு கூர்வார்கள். 'நான் என் இளமைக்கால நிகழ்ச்சிகளை நினைவுகூர்கின்றேன்' என்றார், ஒரு பெரியவர். மாணவன் முன்பு படித்ததை நினைவு கூர்ந்து தேர்வு எழுதுவான் .ஒருவர் செய்த உதவியை, நீண்ட காலங்கழித்தும் நினைவு கூர்வதே நன்றியறிதலாகும்.

நினைவு கூர்தல் முன்பு நடந்த ஒன்றைச் சிறிது சிறிதாக - படிப்படியாக நினைவுக்குக் கொண்டு வருதல். மறந்து மனத்துட் கிடந்ததை வெளிக்கொணர்வது இது.

கூர்தல் - சிறிதளவாக இருந்த ஒன்று சிறிது சிறிதாகப் பெரிதாவது. கூர்தல் - மிகுதிப்படல். இஃது ஓர் உரிச்சொல். **'கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும்'** *(797)* என்பது தொல்காப்பியம். கூர்ப்பு,கூர்தல் என்பது பரிணாமம். தார்வினின் கோட்பாடு. திரு.வி.க. இதைக் **'கூர்தலறம்'** *(பரிணாமம் - **Evolution**)* என மொழியாக்கம் செய்தார்.

இதை 'நினைவு கூறினார்' எனல் தவறு. பல பெரியவர்களே நினைவு கூறினார் என்பதே சரி என்பது போல் எழுதிவிடுவது பெரும்பிழை - பெரியவர் செய்தால் பெரும்பிழை தானே! அவர் காந்தியடிகளின் அரிய செயல்களை நினைவு கூறினார் என்பது பிழை. அப்படி ஒரு சொல் இல்லை. இன்று'நினைவு கூறுகிறேன்' என்று ஒருவரைப் பார்த்து ஒருவர் தவறாக எழுதிவிடுகிறார்கள். 'படர் கூர் மாலை' (துன்பம் சிறிது சிறிதாகக் கூடும் மாலைப் பொழுது); 'துயர் கூர்வாடை' (துயரம் சிறிது சிறிதாகக் கூடும் வாடைக்காலம்) என்பன சங்க இலக்கியம். இவற்றை நினைவுகூர்ந்து, நாமும் நல்ல தமிழில் எழுதுவோம். ஒன்றை நினைவுக்குக் கொண்டு வருவது, 'நினைவு கூர்தல்'; பிழையற்ற அதை நினைவு கூர்தலைக் கைவிடலாமா? ஆங்கிலத்தை ஒரு மொழிப் பாடமாக மட்டும் கற்போம். தமிழே நம் தாயென்பதை என்றென்றும் நினைவு கூர்வோம். தாய்த் தமிழின் பழஞ்சிறப்பை நினைவு கூர்வோரே தமிழராவார்.

## 7 செல்வர்

'சீருடைச் செல்வர்', 'தாழ்விலாச் செல்வர்' என இலக்கியங்கள் பேசும். பொருட்செல்வர் மட்டுமன்று; கல்விச்செல்வர், அருட்செல்வர், கலைச்செல்வர் பலராவர். பிள்ளைகளைச் செல்வன், செல்வி என அழைப்பதில் ஏழைகளும் இன்பங்காண்பர்.

செல்வமிருந்தாலும் செல்வரென உணராமல், வறியவர்போல் வாழ்பவர் பலர். செல்வமில்லாதே செல்வர்போல் மகிழ்வோடு பெருமிதமாய் வாழும் 'செல்வர்களும்' உலகில் உளர்.

இச்செல்வரைச் 'செல்வந்தர்' என்றே, அடிக்கடி பலரும் எழுதியும் பேசியும் வருகின்றனர். செல்வந்தர் தமிழே அன்று, மிகப்பலர் அடிக்கடி செய்யும் பெருந்தவறு இது. இது ஒரு கலப்புச்சொல் (Hybrid). இது வேண்டவே வேண்டாம். செல்வரைக் குறிக்கும் வடசொல் 'தன்வந்த' என்பது, அதைத் தன வந்தர் என்று தமிழில் சொல்லிப் பழகிய நாவானது, செல்வரைச் செல்வந்தராக்கி விட்டது. அது தவறு. தெரியாமல் செய்வது தவறு. அறிந்து செய்வது தப்பு. தெரிந்தும் அறிந்தும் வேண்டுமென்றே செய்வது பிழை. 'தனவந்தரைப்' பார்த்துச் செல்வர், செல்வந்தரானது போலி ஒப்புமையாக்கம். 'செல்வந்த நாடுகளில் என ஒரு செய்தி வந்துளது. செல்வநாடுகளில் என்பதே சரி. ஒலி ஒப்புமையால் நேர்வன இவை.

இவ்வாறு சொற்களைப் பிழைபட எழுதித் தவறு செய்து, தப்புவது தமிழர் இயல்பு. இந்த இழிநிலை இனிக் கூடாது. செல்வரைச் செல்வர்களாகவே வாழ வைப்போம். தெரியாமல் செய்த தவற்றை, இனித் தெரிந்தும் செய்தால், அது பெரும் பிழையாகும்.

## 8 நூல்கள்

கல்வியறிவை வளர்க்க நூல்களே அரிய துணையாகும். முற்காலத்தில் பதப்படுத்தப்பட்ட இலைகளும் ஓலைகளும் செப்புத் தகடுகளும் அறிவுச் சிந்தனைகளை எழுதி வைக்கப் பயன்பட்டன. இன்று நூல்கள், தாளில் அச்சிடப் படுகின்றன. விஞ்ஞான முன்னேற்றத்தால், கணினியில் பதிந்து வைக்கப் படுகின்றன. குறுந்தகடுகளாகவும் ஒளிப்பேழைகளாகவும் நூல்கள்வடிவம் பெறுகின்றன.

இவை காலகாலத்திற்கு, பரம்பரைகட்குக் கல்விக் கருவூலத்தை, அறிவுச் செல்வத்தைக் கொண்டு செல்வன.

மனிதனின் அறிவும் சிந்தனையும் பரவவும் நிலை பெறவும் புதியவற்றுக்குத் தூண்டவும் நூல்களே கருவியாவன. நூல்களை 'நூற்கள்' என்று கற்றறிந்தவர்களும் எழுதிவிடுகிறார்கள். அவ்வாறு வரவே வராது. செந்தமிழாக எழுதுவதாக நினைத்துச் செய்யும் பிழைகளில் இதுவும் ஒன்று. நூல்களே தெய்வங்கள்; நூலகமே அறிவுக் கோயில்கள். நூற்கள் என ஒரு கள், கள்ளுக்கடையிலும் கிடையாது. கால்கள், வேல்கள், சால்கள் (ஏர் ஓடும் வழி) போலவே நூல்களும் வரும். வேற்கள் என வருமா? நெடிலுக்குப் பின் திரிபு ஏற்படாது. கற்கள், பற்கள் எனக் குறிலுக்குப் பின் வரும்போது மட்டுமே திரியும். அதாவது கல் + கள் = கற்களாகும். நூல் + கள் = நூல்களாகவே ஆகும். வேல்களை வேற்கள் என்றா சொல்கிறோம்? கால்கள், காற்களாகுமா?

இவ்வாறு நூல்களை ஆழ்ந்து கற்றுத் தெளிவு பெறுவோம். மொழியைத் திருத்தமுறக் கற்க உதவுவதால் 'நூல்' என்பது, முற்காலத்தில் இலக்கண நூலையே குறித்தது. எனவே நூல்கள் என்றே ஆள்வோம்; அதன் பெயரைக் காப்பாற்றுவோம்! கலைமகள் விழாவிலும் பொங்கல் புதுமனை விழாவிலும் புதிய நூல்கள் வாங்குவோம். தமிழனுக்கு நூல்கள் வாங்கிப் படிக்கும் பழக்கம் இருந்தால், இப்படிப் 'பட்டிமாடாய்'ப் போயிருக்க மாட்டான்!

## 9 அடையாறு

சென்னையிலுள்ள அடையாறு, கடலைச் சென்று அடைகிறது. ஆங்கிலேயனுக்குச் சொல்ல வராததால் ‘அடையார்’ (Adaiyar) என்றான். அவன் போய் ஐம்பதாண்டுகளாகியும் தமிழர்கள் இன்றும் அஞ்சலகம் முதற்கொண்டு Adaiyar, Adyar என ஆங்கிலத்தில் எழுதுவது தவறு. அதுமட்டுமன்றித் தமிழிலும் அடையார் என எழுதுவதும் வழங்குவதும் வெட்கப்படத்தக்கது. தமிழனைப் போன்ற மதிகெட்டவனை உலகிற் காண்பதரிது. பதவி பிடிக்கும் அரசியல் தலைவர்ளுக்கு இது கண்ணிற்படுவதில்லை.

தமிழில் ஒலிக்கும்போது சில சொற்களில் வரும் எழுத்துக்கள் ஓசை சிறிது குறையும். ‘ஞாயிற்தோறும் விடுமுறை’ என்பதுபோல் உச்சரிப்பதுண்டு - ‘று’ குறுகுவதால், இது குற்றியலுகரம் எனப்படும். தமிழ் இனிய மொழி; எளிய மொழி. வல்லோசை சொல்லிறுதியில் வராது. வரின் உகரம் பெற்றே வரும். கோச் (Coach) கோச்சு ஆகும். நட் (Nut) நட்டு ஆகும்.

அடையாறு ஓடுமிடம் அடையாறு. அடையாற்றுக்குப் போக வேண்டும் என்றே பேச, எழுத வேண்டும். அலுவலகம் அடையாற்றில் இருக்கிறது, அடையாற்றில் எங்கள் வீடு உளது என்றே சொல்ல வேண்டும்.

தமிழ் மொழி அறிவை இன்னும் அடையாரே, ‘அடையார்’ என எழுதி வைக்கின்றனர்.

ஆங்கிலத்திலும் ‘Adaiyaru’ என்றே எழுதவேண்டும். தமிழில் ‘அடையாறு’ என்றே எழுதுமாறு அறிவுறுத்த

வேண்டும். கடைப்பெயர்ப் பலகைகளில் எல்லாம் அடையாறு - Adaiyaru என்றே எழுதி வைக்கவேண்டும். அச்சு அனைத்திலும் அடையாறு என்றே அச்சேற்ற வேண்டும். முட்டாள் தமிழன் என்று பெயரெடுக்கலாமா?

## 10 பெரியாறு

அடையாறு போலவே பெரியாறும் 'பெரியார்' ஆகிவிடுகிறது.

நமது ஆங்கில நாளேடுகள் Adaiyar, Periyar, Palar, Kayathar என்று செய்திகளில் வெளியிடுவது கொடுமையானது. அவர்களும் ஆங்கிலத்தில் Periyaru, Palaru, Kayatharu என்றுதான் எழுதித் தம் அறிவுடைமையை வெளிப்படுத்த வேண்டும். அவர்களும் தமிழர்கள் தானே? ஆங்கிலத்தில் நாளேடு நடத்துவதால், வெள்ளைக்காரன் ஆகிவிட முடியுமா? ஆங்கிலம் படித்தாலும் தமிழராக வாழுங்கள் என அறிவுறுத்துவோம்.

தமிழ்ச்சொற்கள் அனைத்தையும் ஆங்கிலத்தில் 'மெசுரா' 'டின்னவேலி' என இவ்வாறு மாற்றி ஒலித்தது ஏன்? கிரேக்கம், இலத்தீன் சொற்களை அவர்கள் ஆங்கிலமயப்படுத்தியதை 'இதுகள்' அறிந்ததில்லை. இதுகளை நாம் புறக்கணிக்க வேண்டும்; காறி உமிழ வேண்டும்.

'பெரியார் நீர்ப்பாசனத் திட்டம்', 'பெரியார் நீர்ப்பாசனக் கால்வாய்', 'பெரியார் அணை' என்றெல்லாம் தமிழில் அங்கங்கே எழுதி வைப்பதும், நாளிதழ்கள் இவ்வாறு தவறாக வெளியிடுவதும்

கொடுமை. 'மரியாதைப் பன்மை கேட்கும் தமிழக ஆறுகள்' எனத் '**தினமணி**'யில் யான் எழுதியதுண்டு. சிலரேனும் திருத்திக்கொண்டனர். ஆனால் தமிழை அழிப்பதே நோக்கமாகக் கொண்டவர்கள் திருந்தவில்லை. பெரியாற்று நீர்ப்பாசனத் திட்டம், பெரியாற்றுக் கால்வாய், பெரியாறு அணை என்றுதான் எழுத வேண்டும். ஆற்றங்கரை, ஆற்றுக்கு அக்கரையில் எனப் பேச்சிலும் சொல்வதுண்டு அல்லவா?

தந்தை பெரியார் பெயரால் இவை வைக்கப்பட்டதாக, நூறு ஆண்டுகளுக்குப்பிறகு ஒருவர் ஆய்வுசெய்து, பட்டம் பெற்றுவிடலாமல்லவா? 'திராவிடக் கட்சிகள் ஆட்சியிலிருந்ததால் பெரியார் நீர்ப்பாசனம் எனப் பெயர் வைக்கப்பட்டது' என நிறுவமுடியுமே? தேர்வாளரும் பட்டம் தரப் பரிந்துரைத்து விடுவாரே?

'தமிழ்நாடு' என்று அறிஞர் அண்ணா பெயர்வைத்த போது, சிலர் தமிழில் அவ்வாறு இருக்கட்டும், சட்டவாசகத்தில், ஆங்கிலத்தில் Tamilnad என்றே போட வேண்டும் என்றனர். அம் மூதறிஞர்கள் வாதத்தை ஏற்காமல் அண்ணா ஆங்கிலத்திலும் 'Tamilnadu' என்றே சட்டவரைவில் பெயரிட்டார். இன்றேல் இவர்கள் தமிழிலும் 'தமிழ்நாட்' ஆக்கியிருப்பார்கள்.

இதைக் குற்றியலுகரம் என்பது தமிழிலக்கணம். தமிழில் க், ச், ட், த், ப், ற் எனும் ஆறு வல்லெழுத்துக்களும் சொல்லின் இறுதியில் வரா. ஏன்? ஒலிப்பதற்குக் கடினமாதலின் 'உ'கரம் சேர்த்து விடுவர். அதனால்தான் தமிழ் இனியதும் எளியதும் ஆனது.

ஆங்கில Set தமிழில் 'செட்டு' எனவும், 'Rate' தமிழில் 'ரேட்டு' எனவும் ஒலிக்கப்படுவதைக் கேட்டதில்லையா? 'நோட்டீசு' ஒட்டாதே என்று எழுதுவதுதான் தமிழ்ப்பழக்கம். 'நோட்டீஸ்' தமிழாக ஆகாது. ஒலி அளவில் தமிழாக்கி விடுவோமானால், அது தமிழோடு தமிழாக வாய்ப்புண்டு. தமிழில் பிறஒலியைக் கலக்காதே; தமிழ்மொழியின் ஒலிச்சீர்மையைச் சிதைக்காதே என்று அறிவுறுத்தத் தயங்கக்கூடாது. அடையாறும், பெரியாறும் தமிழிலும் பிற மொழிகளிலும் ஆறாகவே ஒலிக்கவேண்டும்.

## 11 பதற்றம்

'எல்லையில் பதற்றம் நிலவுகிறது', 'தேர்த் திருவிழாவில் கலவரம்; பதற்றநிலை நீடிக்கிறது. 'பதற்றம்' சொல் எங்கிருந்து வந்தது? பதறுதல், பதறினான், பதறிப்போனான் என்றுதானே சொல்கிறோம். பதர்கள் தானியங்களில் உள்ளீடு இல்லாதவை. நம் நாட்டில் தமிழ் மக்களில் பதர்கள் கூடுதல். தமிழகத் தலைவர்களிலே பலர் பதர்கள் - உள்ளீடில்லாதவர்கள். இதை நினைத்தால் மனம் பதறும். படித்த பதர்களே அவ்வாறிருப்பதால் மக்களை என் சொல்ல? இப்போதும் 'பதட்டம், பதட்டநிலை' என்றே பல இதழ்கள் திரும்பத் திரும்ப எழுதுகின்றன. நம் நாட்டில் இப்போது நாள்தோறும் பதற்ற நிலையாகிவிட்டது. அதைப் பதட்டம் என்றே திரும்பத் திரும்பப் போடுவது மிகப்பெரும் தவறு.

'பதற்றத்தில் தவறு செய்யாதீர்' எனப் பல ஆண்டுகளுக்கு முன்பே தினமணியில் எழுதியதுண்டு.

பதஷ்டம் என்பது தவற்றுக்குமேல் தவறு. ஆஷ்டுக் குஷ்டி வேஷ்டியைத்தின்ற கதை இது.

'தணிகிறது பதற்றநிலை' என்பது தினமணி ஆசிரியவுரைத் தலைப்பு (10-6-2002). மற்ற இதழ்கள் இதைப் பின்பற்றுவதே இல்லை. தமிழறிந்த இதழாளர்களால், தமிழறிஞர்களும் மொழிச்செப்பம் பேண முனைந்தனர். நாளேடுகளும் வானொலிகளும் தொலைக்காட்சிகளும் மொழியைத் திருத்தமுற உச்சரிக்கவும் மொழிச்செப்பம் பேணவும் வழிகாட்ட வேண்டும். பிற இதழ்களை நாம் வெறுக்கவில்லை. ஆனால் ஆக்கத்திற்கு வழிகாட்ட வேண்டியவர்களே, அழிவுக்குப் பழக்கப்படுத்தலாமா? நெஞ்சம் பதறுகிறதே! கொடுமையை எண்ணி வயிறு பற்றி எரிகிறதே! குமுறுகிறதே உள்ளம்!

இனியும் மொழியைச் சிதைத்து எங்களைப் பதற வைக்காதீர்கள்! தமிழிலேயே இதழ் நடத்திப் பேரும் புகழும் பணமும் சம்பாரிக்கும் நீங்கள் சிறிதேனும் நன்றியறிதலுடன் நடந்து கொள்ளுங்கள். 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு'. பதற்றத்தைத் தணியுங்கள்; இன்றேல் பதறிப் போக நேரக்கூடும்.

## 12 சுவர்

நம் நாட்டின் அவலம், அசிங்கம், அருவருப்புக்களில் ஒன்று சுவர் விளம்பரம். பலகாலமாய்ப் பலர் கூறிவந்தும் இன்றும் 'சுவற்றில் விளம்பரம் செய்யாதே' என்று தடித்த எழுத்தில்

எழுதிவைப்பது கண்ணை உறுத்துகிறது. 'சுவரில் விளம்பரம் எழுதாதே' என்பதே சரியானது.

சுவர் எப்படிச் 'சுவறு' ஆகும்? சுவறுதல் - வற்றுதல். சுவரில் எழுதுவதே சுவரைப் பாழ்படுத்துவது. இதைச் சுவற்றில் என எழுதித் தமிழையும் பாழ்படுத்தலாமா?

'சுவரொட்டி' வேறு. ஊரார் வீட்டுச் சுவரில், கள்ளத்தனமாக இரவோடு இரவாக விளம்பரத்தாள்களை ஒட்டுபவரையும், யார் பெயரால் ஒட்டப்படுகிறதோ அவரையும் நான்கு சுவர்களுக்குள் சிறை வைக்க வேண்டும்; தம் பெயரை ஒட்டுவதைத் தடுப்பவர்கள் தவிர.

Poster-என்பதைச் சுவரொட்டி எனப் பெயர்த்ததே தவறு. அது தனிக் கம்பத்தில் ஒட்டவேண்டியது. தட்டி விளம்பரம், கம்பப் பலகை விளம்பரம் என்பன ஏற்கலாம். சுவரொட்டியே கூடாது.

வீட்டுச்சுவர், சுற்றுச்சுவர், கோட்டைச்சுவர், தடுப்புச்சுவர் எல்லாம் இனிச்சுவராகவே இருக்கட்டும்.

## 13 பதிப்பாசிரியர்

ஒரு நூலைச் சரிபார்த்துப் பதிப்பிப்பவர் பதிப்பாசிரியர். அவரைப் 'பதிப்பு ஆசிரியர்' எனப் பிரிக்கக் கூடாது.

திருமுருகு ஆற்றுப்படை - பொருள் தெளிவுபடாது, அதைத் 'திருமுருகாற்றுப்படை' என்றுதான் சொல்ல வேண்டும். அதுவே இயல்பானது.

எழுந்திருந்தான், வந்திருந்தான் வேறு; எழுந்து இருந்தான், வந்து இருந்தான் வேறு அல்லவா?

வருவதானால் வரட்டும். இதை வருவது ஆனால் வரட்டும் என்றால் வேறு பொருள்படுமல்லவா?

கட்டுண்டோம், பொறுத்திருப்போம் என்பதைக் கட்டு உண்டோம், பொறுத்து இருப்போம் எனப் பிரிப்பது பிழையாகி விடும்.

பிரித்தால் தெளிவுபடுமிடங்களும் பலவுள.

குற்றமில்லை-குற்றம்இல்லை
வாட்டடங்கண்-வாள்தடங்கண்
முட்டாட்டாமரை-முள்தாள்தாமரை
கடறாவுபடலம்-கடல்தாவு படலம்
வருவேனென்றுரைத்தான்
வருவேன் என்று உரைத்தான்.
பேருந்துத்தடத்தில் ஓட வேண்டும்
பேருந்து தடத்தில் ஓட வேண்டும்

இவ்வாறு பிரிக்குமிடமும் பொருத்துமிடமும் அறிந்து எழுத வேண்டும்.

## 14 நற்றமிழ்

தமிழின் சிறப்பியல்புகள் பல. அதன் தனித் தன்மைகளை விட்டு விலக முடியாது.

ஆங்கிலத்திற்கும் சில தனித்தன்மைகள் உண்டு. அவை அம்மொழியின் குறையென்று கூடக் கருதப்படும். **Conduct** என்ற ஒரே சொல்லை 'கண்டக்ட்' என ஒலித்தால், நடத்து என்று பொருள். 'காண்டக்ட்'

என்றால் நடத்தை என வேறு பொருள். இதுபோல் பலவற்றைச் சொல்லலாம்.

மொழிகள் மரபு சார்ந்தன. மொழிகளுடன் பழக வேண்டும். பழகப் பழக விவரம் தெரியும். இயல்பூக்கமாக மனமானது மொழி மரபைப் பற்றிக்கொள்ளும்.

மொழியைக் கையாள இலக்கணங் கற்றே ஆக வேண்டும் என்பதில்லை. இலக்கணங்கல்லாத பலர், மிகச் சிறப்பாகச் செவ்விய முறையில் எழுதுகிறார்கள். மொழித்திறன் படிப்பை விடப் பழக்கத்தால் வருவதே மிகுதி. உயர்ந்த புத்தகங்களைப் படிக்கப்படிக்க மொழிப்பழக்கம் கைகூடும்.

புணர்ச்சி, சொற்சேர்க்கை தமிழில் மிகுதி; இன்றியமையாததும் கூட.

நற்றமிழை நல்தமிழ் என்றால் செவிப் புலனுக்குப் பழக்கமில்லாததாகிறது. பல்பொடி வேறு; பற்பொடி வேறு. சில பொடியால், பல் பொடியாகும், அதுவேறு. நற்றமிழை நற்றமிழென்பதே நற்றமிழாகும்.

வாளின் பிடியை வாட்பிடி என்றுதான் சொல்லவேண்டும். வாள் பிடி எனில் ஏவுவதாகும். கல்கோயில், நல்தமிழ், சொல்தொடர், வாள்கண் என்றெல்லாம் பிரிப்பது அவற்றை ஒரு சொல் தன்மையாய்க் காட்டாது. கற்கோயில், நற்றமிழ், சொற்றொடர், வாட்கண் என்றால்தான் தெளிவுபடும். மொழிப் பழக்கம் இது. கடினமாகாது.

'பன்மணிமாலை' என்பது ஒரு நூல்வகை. அதைப் 'பல்மணி மாலை' என்று சொல்லிப்பாருங்கள். சிரிப்புக்கு இடமாகும். பழைமையை முற்றிலும் விடவும் இயலாது. புதுமையை மறுப்பதும் தவறு. எந்த மொழியிலும் இந்தப் போராட்டம்தான் மனிதனுக்கும் வாழ்வு; மொழிக்கும் வாழ்வு.

## 15 நெற்பயிரும் கற்கோயிலும்

வீரப்பன் கும்பலைப்பிடிப்போம் என்றான். (சொன்னவன் வீரப்பன்) வீரப்பன்கும்பலைப் பிடிப்போம் என்றான். (சொன்னவன் வேறு ஒருவன்) இடம் நோக்கிப் பொருளுணர வேண்டும். அல்லது நிறுத்தற் குறிகள் இட வேண்டும். பதிப்பிக்கும்போது இணைத்தும் சற்றே விலகி இடம் விட்டும் பதிப்பிக்க வேண்டும். ஒரு மொழியில் பழகப்பழகவே, அது கைவசப்படும். அதற்கு நிரம்பப் படிக்க வேண்டும்; பயில வேண்டும்; பழக வேண்டும்.

நெற்பயிர், கற்கோயில், முட்செடி, தண்ணீர், பந்தற்கால், விடியற்காலம், பாற்குடம், இருப்புச்சட்டி - இவற்றையெல்லாம் நெல்பயிர், கல்கோயில், முள்செடி, தண்நீர் எனப் பிரித்தா சொல்கிறோம்; எழுதுகிறோம்?

வந்த + உடன் = வந்தவுடன்
மா + இலை = மாவிலை
கை + எழுத்து = கையெழுத்து
நல் + நெறி = நன்னெறி
எள் + துணையும் = எட்டுணையும்

இவையெல்லாம் பழகிப்போனவை. இன்றும் பிரிக்க ஒண்ணாதவை; பிரிக்கக் கூடாதவை.

உழுதுண்டு வாழ்தலை உழுது, உண்டு வாழ்தல் எனப் பிரித்தால், இரண்டும் தனித்தனியாகுமே தவிர, உழுதல் தொழிலின் பயனாக உண்டு வாழ்தலாகாது.

இன்றைய அச்சுக் கலையால் பிரித்து எழுதுவது, தெளிவுபடும் என்றாகிவிட்டது. எனினும் மரபும் சிதையாமல், எளிமையையும் போற்றிக் காக்க வேண்டும். பிரித்தலும் பொருத்தலும் தனிப்படிப்பாகும். அதுதான் புதிய தமிழ் இலக்கணம்.

ஆங்கிலத்தில் பிழையாக எழுதினால், அவ்வாறு எழுத நேர்ந்ததற்காகத் தமிழனே வெட்கப்படுகிறான். தமிழில் முனைவர் பட்டத்திற்கு எழுதும் பேராசிரியர் கூடப் பிழை மலிய எழுதுகிறார். இவ்வாறு எழுதலாமா என யாரும் தயங்குவதுமில்லை; பிழைபட எழுதியதற்காக வெட்கப்படுவதுமில்லை.

பிழையின்றி எழுதும் மனப்பழக்கத்தை வளர்க்க வேண்டும்.

தமிழைப் பிழைபட எழுதுபவன் எவனாயிருந்தாலும் 'இந்தக் கொம்பன் யார் எனக் கேட்க ஆளில்லையா, புலவர் கூட்டந்தன்னில்' எனப் பாவேந்தர் கேட்ட அதே வினாவைக் கேட்க வேண்டும். அவ்வாறு கேட்கவேண்டுமேல், முதலில் புலவர்கள் பிழையின்றி எழுதி வழிகாட்ட வேண்டும்.

## 16 சுப்பிரமணியன்

சுப்பிரமணியன் தமிழ் முருகனுக்கு வழங்கும் வடசொல். உலக வழக்கில் சுப்பையா ஆகும். அது சுப்புவும் சுப்புடுவும் ஆவது கொச்சை வழக்கு. சமற்கிருதச் சொல்லை 'ஸ்பஷ்டமாக'த் தமிழர் அப்படியே வழங்குவது பெரும்பிழை. அதைத் தமிழாக்கித் தமிழ்மைப் படுத்தி வழங்குவதற்குப் பெயர்தான் வடசொல் என்பது. தமிழாக்கிவிட்ட வடசொல்லைத் தமிழ்ச்சொற்களில் ஒன்றென ஏற்றார், தொல்காப்பியர். கமலம், காரணம், தலம் எல்லாம் தமிழ்வடிவமானவை.

ஒரு மொழியைச் சொற்கலப்பு அழிக்கமுடியாது. எதுவரை? அது ஒலிக்கலப்பு ஆகாதவரை. ஒலிக்கலப்பு கூடவே கூடாது. ஆங்கிலேயன் 26 எழுத்துக்களில் உலகமொழி ஒலிகளனைத்தையும் அடக்கி விடுகிறானே? ஒலிக்கலப்பு ஒரு மொழியை அழித்துவிடும். இதை நன்கு உணர்ந்திருந்த நம் மொழிப்பேரறிஞன் 'வட சொல்லை, வடவெழுத்து ஓரீஇ (முற்றிலும் நீக்கி) தமிழ் எழுத்தில் மட்டுமே எழுதுக' என்றான் (தொல். 884).

சொற்சுருக்கம் கருதி, சுப்ரமண்யன் என்பதோ; சுப்பிர மண்யன் என்பதோ தவறு. மணியனானவனை மண்யன் ஆக்கலாமா?

சிலர் ஸுப்ரஹ்மண்ய என்பது தமிழிற்கொட்டும் தேளுக்குச் சமம். ஓர் அம்மையார் - இசைப் பேரறிஞர் - ஸுப்ரஹ்மண்ய பாரதியே' எனப் பாடியிருப்பது பாரதிக்கே செய்த 'துரோகம்' எனலாம்.

'சுப்ரமணியன்' என்று தொலைக்காட்சியிலும் இதழ்களிலும் அடிக்கடி போடுகிறார்கள். 'திருவனந்தபுரம்' என்பது, மிக நீளமென்று சுருக்காத சேரநாட்டானின் நல்லுணர்வு, இங்கு விளங்காமற் போனது நம் தவக்குறைவே. ஆங்கிலத்திலும் அது அதே பெயரில் உளது. **Thiruvananthapuram** என்றே எழுதுவது காண்க. **Adyar** போடும் ஆங்கில ஏடுகளும் மிக நீளமென்று இதை மாற்றுவதில்லை. இங்கிருப்பவர்கள் இளிச்சவாயர்கள்தானே!

எந்தப் பிறமொழிச் சொல்லையும் தமிழ் ஒலிவடிவப் படுத்தி, தமிழ் எழுத்துக்களுக்குள் அடக்கி, தமிழ்மைப்படுத்தி, தமிழாக்கி வழங்கவேண்டும். சுப்பிரமணியன் என்பதே முழுமையான தமிழ்வடிவச் சொல். அவ்வகையில் சுப்பிரமணியனைக் காக்க என்று நம் தமிழ் முருகனை வேண்டுவோமாக!

## 17 திருவேங்கடத்தான்

வேங்கடம் என்பது நல்ல தமிழ்ச்சொல். கடம், கடறு, காடு (குறு, 331, அகம். 179, 225) என்பன தமிழ்ச்சொற்கள். வேகும் கடம் - வெப்பமிக்க காடு, வேகும் என்பது வேம்கடமாகி, வேங்கடமாகும். வேங்கடம் என்ற சொல் சங்கப் பாடல்களில் பதினான்கு இடங்களுக்குமேல் வருகிறது. (அகம். 27, 85...) போகுங்காலம் போங்காலமாகும் அல்லவா? திருவேங்கடம் தூய நல்ல தமிழ்ச் சொல். திருவேங்கடத்தான் திருவேங்கடத்தில் உள்ளவன். அவன் நல்ல தமிழன். நம்மவன்.

வடசொல் அசலம் (மலை) என்பது. அதைச் சேர்த்து வேங்கடாசலம், தணிகாசலம், மருதாசலம் ஆக்கினர். வேங்கட அசலம், தணிகை அசலம், மருத அசலம். இவை கலப்பினம். தவறானவை. வேங்கடமலை, தணிகைமலை, மருதமலை என்பனவே தமிழாகும். எதையும் முடிந்தவரை வடமொழியாக்குவது, இடைக் காலத்தே நுழைந்த ஒரு கொடிய மனப்பழக்கம். வேகும் கடம் - வேங்கடம் தமிழில்லை என்றால், அவ்வெப்பத்தில் வெந்து போக வேண்டியதுதான்! வேங்கடத்தானே அவர்களைக் காக்க வேண்டும். வேங்கடாசலத்தை இன்னும் பிழைபட வெங்கிடாசலம். வெங்கடாசலம். எனத் திரிக்கின்றனர். திருவேங்கடவன் என்று பெயரிடுவர். இந்த வேங்கடவனை, வெங்கடவனாக்குவர். பிறகு வெங்கடராமன், வெங்கடகிருஷ்ணன், வெங்கிட்டு, வெங்கட்ராமன், வெங்கட், வெங்கு என்று நம் திருவேங்கடத்தானை இவர்கள் சிதைப்பது 'பாவம்' அல்லவா! ஆழ்வார்களின் பாடல்களில் திளைத்தவர்கள் இதனை ஒப்புவர்.

ப்ரியா, ஸ்ருதி, ஸ்நேகா என இவ்வாறு தமிழ்ப் பிள்ளைகளுக்குப் பெயரிடுவதும் மாபெரும் பிழை. ஒரு வேளை பிரியா, சுருதி, சிநேகா என அழைத்தால் நரகம் புகாமல் தப்பிக்கலாம். சீதா என்பதுகூடத் தமிழன்று என்பதால், சீதை என்றே அழைப்பார் கம்பர். இராமனைப் பன்னீராயிரம் பாடல்களில் ஓரிடத்திலாவது ராமன், ராம் எனக் குறித்துள்ளாரா? திட்டமிட்டுச் சமற்கிருதத்தைப் புகுத்தி வருவது பாவங்களிலெல்லாம் மிகக் கொடிய பாவமாகும். தமிழைத் தமிழாகவும்

சமற்கிருதத்தைச் சமற்கிருதமாகவும் பயன்படுத்துவது இரு மொழிக்கும் நல்லதல்லவா?

## 18 தமிழைப் பொறுத்தவரை...

இன்று தமிழ் இதழாளர்கள் அடிக்கடி செய்துவரும் ஒரு பெரும் பிழை, 'இந்தியாவைப் பொருத்தவரை', ஒரு தாயைப் பொருத்தவரை; அரசைப் பொருத்தவரை என எழுதுவனவாகும். சமையல் வேலனைப் பொறுத்தது. பந்தி மேற்பார்வை முருகனைப் பொறுத்தது. கட்சி மேம்பாடு தலைவரைப் பொறுத்தது. சிக்கனத்தைப் பொறுத்ததே செல்வ வளம். அவரைப் பொறுத்தவரை எதுவும் கெடுதலில்லை. இங்கெல்லாம் பொருத்துவது எதுவுமில்லை.

இது ஆங்கிலப் பழக்கத்தால் தமிழில் உருவான ஒரு சொல். பழைய இலக்கியங்களில் காணப்படவில்லை. 'As far as India is concerned' (இந்தியாவைப் பொறுத்தவரை); As far as I am concerned (என்னைப் பொறுத்தவரை) எனத் தொடர்கள் உருவாயின. தமிழிலும் பொறுப்புக்கட்டுதல் என்பார்கள். இங்கு 'பொறுப்பு' என்னவென்றால், அதன் தொடர்பாக, அதைப்பற்றியதாக, அதற்குரியதாக என்பனவாகும். இதைப் போய்ப் 'பொருத்தவரை' என்றால், அதற்குப் பொருந்தும்படியாக என்றுதான் பொருள்படும். பொருத்துவது எதுவுமில்லை; உரிமையுள்ள இயல்பு எனத்தகும் 'பொறுப்பே' உளது.

தமிழைப் பொறுத்தவரை, இது ஒரு புதுச்சொல்லாக்கம். திரு.வி.க முதல் மு.வ., வ.சுப.மா. வரை அண்மைக்காலத்தமிழ்ப் பேரறிஞர்கள் எல்லாம் 'பொறுத்தவரை' என்றே ஆண்டுள்ளனர்.

கட்டிடத்தைப் பொறுத்தவரை உறுதியாகவே உளது என்றால், அதன் கட்டுமானத் தொடர்பு, உறுதி, வலிமை வரை என்று பொருள் கொள்ள வேண்டும்.

## 19 உயருமா, கூடுமா?

விபத்தில் சாவு எண்ணிக்கை உயருமா, கூடுமா? இன்றும் சிலர், இறந்தவர் எண்ணிக்கை பதினேழாக உயர்ந்துவிட்டது என்றே ஒலிபரப்பியும் எழுதி வெளியிட்டும் வருகின்றனர். பெண் சிசுக்கொலை சென்ற ஆண்டைவிட உயர்ந்துள்ளது என எழுதுகின்றனர். நச்சுக் காய்ச்சலால் இறப்பவர் தொகை ஆண்டு தோறும் உயர்ந்து கொண்டே போகிறது என ஒலிபரப்புகின்றனர். இவர்களின் அறியாமை 'உயர்ந்து விட்டது' எனலாமா? சாவுகள் எவ்வாறு உயரும்? தொகை, எண்ணிக்கை கூடும்; குறையும். அது எப்படி உயரும்?

விபத்தில் காயமடைந்தவர் தொகை, கூடிவிட்டது; அதிகரித்துவிட்டது; மிகுதியாகிவிட்டது எனலாம்.

ஒலிபரப்பு, ஒளிக்காட்சிச் செய்திகளை எழுதித் தருபவர்கள் தொகை இன்று மிகவும் கூடிவிட்டது. ஆனால் அவர்கள் உயரவில்லை. சாவு எண்ணிக்கை மட்டுமே உயர்கிறது. அவர்கள் சிறிது தமிழறிவுடன், ''எண்ணிக்கை கூடுகிறது; இன்னும் கூடும்போல் தெரிகிறது'' என்றே சொல்வார்கள் எழுதுவார்களெனில், அது கட்டளைத் தமிழுக்கு இனிது! பேருந்து விபத்தில் இறந்தவர் தொகை ஆறிலிருந்து ஒன்பதாக எப்படி உயருமோ தெரியவில்லை? கூடிவிட்டது என்றால் என்ன குறைந்துவிடும்?

## 20 ஆர்க்காடு

ஆர் என்பது ஆத்தி. ஆத்தி மரங்கள் நிறைந்த காடு ஆர்க்காடு.

மரங்களால் ஊர்ப்பெயர்கள் அமைவதுண்டு. ஆத்திக்காடு என்றே ஊருளது. தில்லை (சிதம்பரம்), மருதூர், வேப்பம்பட்டி, ஆலங்காடு எனப்பலவுள. சங்கப் பாடல்களில் வளம் மிக்கதாக ஆர்க்காடு கூறப்படுகிறது.

சமற்கிருதமயமாக்குவதே ஒரு கேடு, அதிலும் பொருள் தெரியாமல் மொழி பெயர்ப்பது பெருங்கேடு. தமிழில் சிலர் ஆர்க்காட்டை ஆற்காடு என எழுதினதும் தப்பு. அதை ஆறுகாடு என நினைத்துச் சமற்கிருத அறிஞர்கள் 'ஷடாரண்யம்' என மொழி பெயர்த்தது அதைவிடத் தப்பு. (ஷட் + ஆரண்யம் = ஆறுகாடு)

ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வழங்கி வரும் இப்பெயரை 'ஆர்க்காடு' என்றே எழுதவேண்டும். மாற்றி எழுதுதல் அறிவின்மையின் வெளிப்பாடாகும். இதுகுறித்துப் பேரறிஞர் **மு.வரதராசனார்** தமது **'தமிழ் இலக்கிய வரலாற்றில்'** குறிப்பிடுவன வருமாறு:

''முதுகுன்றம் முதலான பழைய ஊர்களின் தமிழ்ப்பெயர்களை விருத்தாசலம் முதலான வட சொற்களாக மாற்றிவிட்டுப் பிறகு, வடமொழியிலிருந்தே தமிழ்ப் பெயர்கள் வைக்கப்பட்டன என வாதாடினார்கள். கோயில் தெய்வங்களுக்கு இருந்துவந்த தமிழ்ப் பெயர்களையும் அவ்வாறே மாற்றினார்கள். பழைய பக்திப் பாடல்களில் இருந்து வந்த தமிழ்ப் பெயர்களும் அவ்வாறு

கோயில்களில் வடமொழியாக மாற்றப்பட்டன. சங்க இலக்கியத்தில் காணப்படும் ஆர்க்காடு என்ற ஊர்ப் பெயரை வடமொழியில் மொழி பெயர்த்தபோது, சொல்லின் சரியான பொருள் உணராமல் ஆறுகாடு என்று கருதி ஷடாரண்யம் எனத் தவறாக மொழிபெயர்த்தார்கள். அவற்றிற்கு ஏற்றபடி பிற்காலத்தில் கதைகளும் எழுதினார்கள்... பாலாற்றை க்ஷீரநதி என்றார்கள். இவ்வாறு வீணாக வடமொழி அறிஞர்கள் ஒரு பகையுணர்ச்சிக்கு வித்திட்டார்கள்''. *(பக். 10-11)*

**பரிதிமாற்கலைஞர்** என்ற சூரிய நாராயண சாத்திரியார், தமது தமிழ் மொழியின் வரலாற்றில் குறிப்பிட்டிருப்பதும் கருதத் தக்கது.

''இன்னும் அவர் (ஆரியப் பிராமணர்) தம் புத்தி நலம் காட்டித் தமிழரசர்களிடம் அமைச்சர்களெனவும் மேலதிகாரப் பிரபுக்களெனவும் அமைந்து கொண்டனர்; தமிழரிடத்திலிருந்த பல அரிய விஷயங்களையும் மொழி பெயர்த்துத் தமிழர் அறியுமுன்னரே அவற்றைத் தாமறிந்தன போலவும், வடமொழியினின்றுமே தமிழிற்கு அவை வந்தன போலவும் காட்டினர்.'' *(பக். 33)*

மிக அடிக்கடி நேரும் பிழைகள் இவை. இவற்றையும் திருத்த வேண்டும். இழந்தவற்றை மீட்டுருவாக்கம் செய்ய வேண்டும்.

1. தமிழகத் திருக்கோயில்களிலுள்ள தெய்வங்களின் பெயர்களை, பழம் பாடல்கள், வரலாறு இவற்றின் வழிக்கண்டு, அவற்றைத் திருத்தமாக வழங்க வேண்டும்.

அடிக்கடி நேரும் பிழைகளில், இவ்வாறு தமிழ்ப் பெயர்களை உருமாற்றித் தமிழல்லாதன போல் காட்டுவதையும் நீக்குதல் வேண்டும். அரங்கம் என்பது ஆற்றிடைக்குறை. ஆற்றுக்கு இடையே இருக்கும் மணல் மேடு. கடலுக்கிடையே தீவு போல இருப்பது. ‘ஆற்று வீ அரங்கத்து’ (ஆற்றை மறைக்கும் அரங்கம். அதாவது ஆற்றிடைக் குறை. சிலம்பு. 10-156. பழைய உரைகள்.) சிலப்பதிகாரம் இவ் அரங்கத்தில் சமணச் சாரணர் தோன்றி, வழிநடையாக வந்த கண்ணகி முதலானோர்க்கு அருளுரை வழங்கியதைக் குறிக்கிறது. மேலும், அதன் இயற்கை வளமும் வண்ணிக்கப்படுகிறது. (இச்சொல் மேடை, நாடக மேடை, மகளிர் நாட்டிய மேடை எனும் பொருளில் வளர்ந்தது. அரங்கம், அரங்கேற்றம் இவ்வாறு வந்த சொற்களே.) இது திருவரங்கம் ஆனது, திருமாலின் திருத்தலமும் ஆனமையாலேதான். அரங்கன் தூய தமிழ்ப்பெயர். அரங்கநாதன், அரங்கசாமி என்றெல்லாம் வளரும் இப்பெயரை ரங்கனாதன், ரெங்கநாதன், ரெங்கன் எனப் பேச்சில் திரித்துவிடுவர். இதை ஸ்ரீரங்கம் ஆக்கிவிட்டுப் பிறகு திருவரங்கமாக்கியதாக மயங்கி, இன்றும் சீரங்கம் என்றே வழங்கி மகிழ்வர். இவையெல்லாம் திருவரங்கனுக்கே அடுக்குமா? இவ்வாறு தமிழைப் ‘பிழைப்போர்’க்குத் துறக்கவுலகம் திறக்குமா? (சொர்க்கவாசல் திறக்காது) என்றால், நம்மீது சினந்து பயனென்ன? தவறு செய்வோம்; குறை

கண்டு கூறினால் 'குதறி' எடுப்போம் என்றால், அது நேர்மையாகுமா?

2. ஊர்ப் பெயர்களையும் அவ்வாறு தமிழாக்கி வழங்க வேண்டும். சில ஆற்றின் பெயர்கள் கூட மாற்றப்பட்டுள்ளன. அவற்றின் தமிழ்ப் பெயர்களையும் மீட்க வேண்டும்.

3. தமிழர்தம் சிற்பக்கலை, நாட்டியக்கலை, இசைக்கலை யாவும் தமிழில் மீட்டுருவாக்கப்பட வேண்டும்.

'ஆர்க்காடு' எனும் பெயரையே, தவறென்று, நன்குதெரிந்தும் மாற்றாதவர்களா, இவற்றிலெல்லாம் கருத்துச் செலுத்தப் போகிறார்கள்? தமிழுக்காகத் தன்னலம் துறந்து தவம் செய்பவர்கள் பிறந்தால் மட்டுமே இனித் தமிழ் வாழும்.

## 21 வயிறார

வயிறார உண்டான் என்றால் வயிறு நிரம்ப உண்டான் என்பது பொருள்.

இதை 'வயிறாற' எனல் தவறு. பசியாறுதல், பசியாற உண்ணுதல் வேறு. அது பசி தீர, பசி வேட்கை தணிய உண்பதைக் குறிக்கும். 'ஆர' என்பது 'துணைவினை'. காலார நடந்தான். கண்ணாரக் கண்டேன். மனமார நேசித்தேன். காதாரக் கேட்டோம். இங்கெல்லாம் ஆர - நிரம்ப, நிறைய, முடிந்தவரை முழுமையாக, நன்றாக எனப் பொருள்படும்.

ஆரஅமர என்பது ஓர் இணைத்தொடர். ஆர - நன்றாகவும் முழுமைபெறவும். அமர - அமைதியாக,

நிதானமாக. 'ஆர அமரச் சிந்தித்துப் பதில் சொல்; அவசரப்படாதே' என்பர்.

ஆர்தல் - நிறைதல், நிரம்புதல், மனநிறைவாக என்பது. இன்று 'திருப்தியாக' என்பர். 'ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்கும்' *(354)* என்பது குறுந்தொகை. மிகுதியாக உண்டால் தேனும் புளிக்கும். இன்று 'மனமார்ந்த நன்றி' என்று கூறுகிறோமல்லவா? அது மனம் நிறைந்த நன்றியல்லவா? அறிவார்ந்த நீங்களும் மனமாரச் சிந்தித்தால் பிழைநீக்கி எழுதலாம். கழுகுபோல் தாய்த் தமிழைக் கொத்தித் தொலைக்கத் திரிபவர்கள் நடுவில் மிக விழிப்பாக இருக்க வேண்டியுளது. வேண்டுமென்றே, தெரிந்தும் 'நையாண்டி தர்பார்' செய்பவர்களை இப்படிச் சொல்ல வேண்டியுளது.

## 22 மனம்

மனம் நல்ல தமிழ்ச்சொல். பழையது பழசு ஆவதுபோல், பேச்சில் மனம் மனசு ஆகி அது மனதும் ஆகும். திருவள்ளுவர் மனம் என்றே ஆள்வார். சங்கப் பாடல்களில் மனம், மனத்தது, மனத்தர், மனத்தேம், மனத்தை என்றே இச்சொல் இடம்பெறுகிறது.

மனம் + இல் = மனத்தில். மனம் + ஐ = மனமை அன்று; மனத்தை ஆகும். அத்து - சாரியை.

சொல்லையும் உருபையும் சேர்க்க உதவுவது சாரியை.

எனவே பலர் இன்று மனதை, மனதில், மனதுக்குள் என எழுதுவன பேச்சுவழக்கை ஒட்டியன.

அவை கட்டளை மொழி ஆகா. இன்னும் மேலே போய் மனஸ், மனசு என்றெல்லாம் சொல்வன, மனத்தை வருத்தும் பிழைகளாகும்.

மன் - நிலைபேறு. மன்னுதல் - மனம் - மனிதன் - மனுகுலம் - மனுநீதிச் சோழன் - மன் மான் ஆகும்போது மானுடம் எல்லாம் தமிழ் வேருடையன. 'மனம் தூயாரும்', 'மனத்துக்கண் மாசிலாரும்' இதை ஒப்புவர். தொல்காப்பியர் ஆறு அறிவுள்ள உயிர்களை வரிசைப்படுத்துவார். அதில் 'ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே' என்பார். தமிழில் மனம் - மனன் என்றும் வரும்.

## 23 பிழைதிருத்தம்

பிழையைத் திருத்துவது பிழைதிருத்தம். சிலையைத் திறக்கும்போது மிகும் -'த்'- ஒற்று, சிலைதிறப்பில் மிகாது. பிழை திருத்தத்திலும் இடையில் 'த்' ஒற்று வராது. சிலர் பிழைத் திருத்தம் என எழுதுவது தவறு. அது பிழையைப் பிழையாகத் திருத்துவது.

தமிழில் சொற்கள் சேரும் புணர்ச்சி விதிகள் அதன் சிறப்பியல்புகளில் ஒன்று. புணர்ச்சி விதிக்கும் பொருளுணர்ச்சிக்கும் தொடர்புண்டு. சொல்லிச்சொல்லிப் பார்த்தாலே பொருள் விளங்கிவிடும்.

## 24 கைம்மாறு

நாட்டுக்கும் மக்களுக்கும் கைமாறு கருதாமல் தொண்டு செய்யவேண்டும் எனப் பலர் எழுதி விடுகின்றனர். அடிக்கடி செய்யும் பிழைகளில் இதுவும்

ஒன்று. கை மாறு - கையிலுள்ள விளக்குமாறு, துடைப்பம்.

மொழி மனிதனால் உருவானது; அவனுடைய அறிவுக் கூர்மையனைத்தும் மொழியிலுமிருக்கும். அவனது நுட்பத் திறனெல்லாம் அவன் படைத்து வழங்கும் மொழியிலும் காணப்படும்.

கை மாறு - கையிலிருக்கும் மாறு; கூட்டும் மாறு; விளக்கும் மாறு. கைம்மாறுதான் ஒருவர் செய்த உதவிக்குப் பதிலுதவி. ஒருவர் அல்லது ஒரு பக்கத்து உதவிக்கு, எதிர்ப்பக்கத்திலிருந்தும் உதவி செய்வது கைம்மாறு. ஒரு சொல் நீர்மைத்து என்பார்கள். ஒரே சொல்லாய் நிற்கிறது. கை மாறு, கையிலுள்ள மாறு என இருசொல் நீர்மைத்து. கை மாற்றாகப் பணம் கொடுத்து வாங்குவது வேறு. கைம்மாறு - மகரமெய் மிகுவதால் ஒரேசொல்லாகிறது.

திருவள்ளுவரும் ஒப்புரவைக் 'கைம்மாறு வேண்டா கடப்பாடு' என்றார். கைம்மாறு கருதாது மொழிச்செப்பம் பேணுதலே, மொழிப்பற்றுக்கு அடையாளம்.

## 25 விளக்குமாறு

சிலசொற்களை இருவகையாகப் பிரிக்கலாம். அங்கு பிரித்துவிடுவது நல்லது. பொன்னன்று என்பதைப் பொன் + நன்று எனவும் பொன்+அன்று எனவும் பிரிக்கலாம். மண்ணன்று என்பதும் இதுபோன்றதே (மண் + நன்று, மண் + அன்று). புணர்ச்சி மாற்றத்தால் பொருள் மாறுகிறது அல்லவா?

விளக்குமாறு என்பதை விளக்கும் + ஆறு; விளக்கும் + மாறு என இருவகையாகவும் பிரிக்கலாம். இற்றைத் தமிழில் இவற்றை இடம் நோக்கிப் பிரித்தெழுத வேண்டும்.

பிரித்தறியும் மொழியாற்றலின் இன்றியமை யாமையைக் கீழ்வரும் நிகழ்ச்சி விளக்கும் :

''ஒரு மாணவன் இடக்கர் வினா ஒன்றை வகுப்பில் கேட்டபோது, அவ்வினாவிற்கு விடை வகுப்பிலேயே அளிக்கமுடியாதாகையால், ஆசிரியர் (சூரிய நாராயண) சாத்திரியார், 'உனது வினாவிற்கு இப்போது விடையளிக்க இயலாது; அதை உனக்கு விளக்குமாற்றால் விளக்குதும்' என்று கூறினார். அதன் பிறகு, அம்மாணவன் அப்பழக்கத்தைக் கைவிட்டான் என்பதில் வியப்பில்லை'. (பரிதிமாற் கலைஞர் நூற்றாண்டு விழா மலர், ப.112.). இதில் எதுவும் தவறில்லை. விளக்கும் ஆற்றால் முறைப்படி விளக்குவோம் என்றே பொருள்கொள்ள வேண்டும். செருக்குடன் கேட்கக்கூடாது என்பதற்கு விடை இது.

## 26 செய்ந்நன்றியறிதல்

நன்றி என்பதற்கு முன்பு நன்மை என்றே பொருள். இன்று அது கிடைத்த நன்மைக்கு, நினைவு கூர்ந்து அன்பை வெளிப்படுத்துவது என ஆகிவிட்டது.

செய் நன்றி-ஒருவர் செய்த, செய்கிற, செய்யப் போகிற நன்றி - நன்மை என்பதாகும். அதை அறிவது என்றால் அவ்வாறு பெற்ற நன்மையை நினைப்பது; மறக்காமல் இருப்பது !

'எதை அறிதல்' என்றால், 'ஒருவர் செய்த நன்மையை அறிதல்'. அங்ஙனம் வரும் தொடரில் 'செய்ந்நன்றி அறிதல்' என, ஒரு சொல்லாக்குகின்றோம். அதனால் அதைச் 'செய்ந்நன்றி' என்றே சொல்ல வேண்டும். இங்குக் கூர்மையான பொருள் வேறுபாடு உளது. பெரும்பாலும் பலர் செய்நன்றியறிதல் என்றே எழுதிவிடுவது தவறு.

செய்ந்நன்றி(யறிதல்) என்று 'ந'கர ஒற்றுப் போட்டு, ஒரு சொல் போல் எழுத வேண்டும். திருவள்ளுவர் 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு' *(110)* என்றுதான் குறிப்பிட்டுள்ளார். ஒருவர் தாம் செய்த நன்றியைத் தாமே அறிதலைவிட, அதைச் செய்து கொண்டவர் அறிவதே சிறப்பு. முன்பு செய்த நன்மையாதலால் அது செய்ந்நன்றி என ஒரு சொல் நீர்மைபெற்றது. நகரஒற்று மிகுவது புணர்ச்சி விதி. பொருளுக்கு ஏற்ப, ஒரு சொல்லாக்க வருகிறது.

## 27 மெய்ம்மையும் பொய்ம்மையும்

மனிதனின் அறிவுக் கூர்மையும் சீர்மையும் அவன் வழங்கும் மொழியிலும் காணப்படும்.

அறிவை மேன்மேலும் கூர்மைப்படுத்துவது, திறனைப் பெருக்குவது போல, மொழியையும் மேன் மேலும் கூர்மையாகவும் திறமையாகவும் ஆற்றலோடும் பயன்படுத்தப் பழக வேண்டும்.

ஒருவனது பேச்சையும் எழுத்தையும் வைத்து அவனது அறிவு, சிந்தனை, பண்பு இவற்றை அளந்து விடலாம்.

ஆங்கிலத்தில் எவ்வளவு செறிவுடன் எழுதினாலும் அது அனைவராலும் பின்பற்றப் படுகிறது. தமிழில் 'ஐயோ கடினம் கடினம்' என்று அலறி, அனைவரும் அதைத் தரம் தாழ்த்தவே காண்கிறோம்.

தமிழில் பிழைநீக்கி எழுதும் மனப்பான்மை வளர வேண்டும். பிழை நேர்ந்தால் வெட்கப்பட வேண்டும்.

மக்களின் அறிவாற்றல் என்பது, அவர்களின் மொழியைச் சார்ந்துளது. மொழியை வலுவிழக்கச் செய்தால், அதைப் பயன்படுத்தும் மக்களின் அறிவு மழுங்கடிக்கப்படும். இதைத்தான் தமிழ்ப் பகைவர்கள் செய்கிறார்கள். தமிழரின் அறியாமை, மூடத்தனம், மடமை அதற்கு அடிபணிகின்றன.

அடிக்கடி நேரும் பிழைகளைத் தீர்க்கும் மனப் பழக்கம், மொழிக்கு அன்று - அதைப் பயன்படுத்துபவனுடைய அறிவுத் திறமையைக் கூர்மைப்படுத்தும் என்பதை அறிவுறுத்துங்கள். ஒருவன் பேசுவதை வைத்தே அவன் பண்பு, பழக்கம், திறமையை அளந்துவிடலாம். தமிழை எவ்வளவு சிறப்பாக, நுட்பமாக, கூர்மையாக, செவ்விதாகப் பயன்படுத்துகிறோமோ, அந்த அளவு நாமும் உயர்வோம். தமிழ்ப் பகை உடனிருந்தே கொல்லும் நோய். தமிழுக்கு வாய்த்த பலர் அந்நோய்க்

கிருமிகளானதால், மொழிச்செப்பம் பேணப்படுவது கேலி செய்யப்பெற்றது.

மெய்மை, பொய்மை என்னாமல் மெய்ம்மை, பொய்ம்மை என்று ஏன் ஒற்றுச் சேர்க்க வேண்டும்?

மெய் + மை = மெய்யான மை. பொய் + மை = பொய்யான மை என இரு சொற்களாகப் பிரித்துப் பொருள்கொள்ள இடமுளது.

மெய் - உண்மை, மெய் + மை = மெய்யினது தன்மை. பண்புச்சொல்லாக - ஒரு சொல்லாக - ஆகும்போது மெய்ம்மை ஆகிறது. பொய்ம்மையும் ஒரு பண்புச்சொல். ஒரு சொல்லாகப் புணரும் போது 'ம்' மிகுகிறது. புணர்ச்சி விதி, பொருளுணர்ச்சிக்காகவே.

பிழையின்றி எழுதுவது மொழிக்காக அன்று, மொழிப் பற்றினாலன்று. தெளிவுக்காக அது தேவைப்படுகிறது. கருத்துப் பரிமாற்றத்துக்கு மொழித் தெளிவு தேவை. இதைப் போய் மொழிப் பற்று, மொழி ஆர்வம், வெறி என்பது 'சதி' செய்பவர்களால் வகுக்கப்பட்ட வியூகம். நாம் தமிழர்களாக வாழவே தமிழைப் பயன்படுத்துகிறோம்.

சொற்களின் பொருள் மாற்றத்திற்கு ஏற்பப் புணர்ச்சி மாறும். சொற் சேர்க்கையாகிய புணர்ச்சி மாறினால் பொருள் வேறுபடும்.

மெய்ம்மையும் பொய்ம்மையும் பண்புச் சொற்களாக உருவானவை. அவற்றை 'மகர' ஒற்றுச் சேர்த்தே எழுத வேண்டும்.

வாய்மை, தாய்மை, சேய்மையும் பண்புச் சொற்களே. அவை நெட்டெழுத்தை அடுத்து வந்ததால் ஒற்றுமிகவில்லை. மெய்ம்மை - குறிலை அடுத்து வருவதால், பண்புச் சொற்புணர்ச்சிப்படி ஒற்று மிகுந்தது. 'பொய்ம்மையும் வாய்மை இடத்த' என்பதே வள்ளுவம். *(292)*

## 28 அருகில்..

பள்ளிக்கூடம் வீட்டின் அருகில் இருக்கிறது. கோயில் அருகே குளம் இருக்கிறது. அருகில் இருப்பவர்களுடன் அன்பாய்ப் பழக வேண்டும். வரவரத் தமிழுணர்வு அருகிவிட்டது என்பர். சுருங்கிவிட்டது என்பது அது.

இதைப் பலர் 'அருகாமை'யில் எனப் பிழைபட, அடிக்கடி எழுதிவிடுகின்றனர்.

அருகில் என்பது இட அணிமையைக் குறிக்கும். அண்மையில் நடந்தது. அண்மைக் காலமாக நாடு பதற்றத்தில் இருக்கிறது. இதை அணிமை என்பதும் உண்டு. அணிமையில்தான் அவருக்குத் திருமணமானது; அவர்வீடு அணித்தாக உளது. அண்மை, அணிமை இரண்டும் காலம், இடம் இரண்டின் சுருக்கத்தை உணர்த்துகின்றன. 'பசிப்பிணி மருத்துவன் பண்ணன் இல்லம் அணித்தோ, சேய்த்தோ' என்பது புறப்பாட்டு *(173)*. சிலர் 'ரெடி' பண்ணி ஆவதை 'அணியமாவது' - புதுச்சொல்லாக்கம்.

'எங்கள் வீடு அருகில்தான் இருக்கிறது'. இதில் 'அருகாமையில் இருக்கிறது' என 'ஆமை' எவ்வாறு புகுந்ததோ, தெரியவில்லை.

அருகண்மையில் இருக்கிறது என்பதுதான் அருகாமை என வந்திருக்கவேண்டுமென்று தமிழாசிரிய நண்பர் எழுதியிருந்தார். அருகு+அண்மை என இதை ஒரு பொருட்பன் மொழியாகக் கொள்ளலாம். மிக அருகில் எனப் பொருள்படும். எங்ஙனமாயினும் 'அருகாமை' என்பது தவறு. அருகண்மை என்றாவது எழுதவேண்டும். தமிழை விரும்பி ஏற்குங்காலம் அருகில் வரப்போகிறது. அதைத் தமிழ்ப் பகைகள் இன்று அளவுக்கு மீறி ஆட்டம் போடுவதை வைத்து அறியலாம்.

## 29 பொருள்கள்

பொருள்கள் பலவுள; பொருள்களை எடுத்துவை; ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள் உள்ளன. இவ்வாறு 'பொருள்கள்' என்பதே சரியானது. இதைப் 'பொருட்கள்' என்பது தவறு. அறிஞர்களும் 'பொருட்கள்' என எழுதிவிடுகின்றனர். காரணம் பொருட்சிறப்பு, பொருட்பேறு, பொருட்காரணம் எனப் பிற இடங்களில் வருவதால், 'ஒப்புமையாக்கவுணர்வினால்' தம்மை மறந்து இத் தவற்றைச் செய்து விடுகின்றனர். ஒலிஒப்புமையால் செல்வர் - செல்வந்தர் ஆனது போன்ற பிழை இது.

'கள்' விகுதி பிற்காலத்தது. பொருளினது சிறப்பு பொருட்சிறப்பு. கள் விகுதி, தனிச்சொல் அன்று. எனவே பொருள்கள் என்பதே சரி. சுருள்கள் என்பதைச் சுருட்கள் என்று சொல்லிப் பாருங்கள்.

ஒலிஒப்புமை, ஒலி இயைபு, ஒலி இனிமை போன்றவை கருதிப் ‘பொருட்கள்’ எனப் பலர் எழுதி விடுகின்றனர். என் செய்வது? அது தேவை இல்லை. ‘பொருள்கள்’ என்றாலே போதும். அதுவே மொழிச்செப்பத்தின் பாற்படும்.

## 30 நாள்கள்

நாள் என்பதன் பன்மைச்சொல், நாள்கள் என்பது. இதைப் பலர் நாட்கள் என்றே எழுதிவிடுகின்றனர். நாள்களா? நாட்களா?

‘நாட்கள் உண்டு’ என்பது புறநானூறு (123), ‘நாள்மலர் - புதியமலர், அன்று அலர்ந்த மலர். நாட்கள் - அன்று காலையில் வடித்த கள் என்றும் நாட்பட்ட பழைய கள்ளென்றும் பொருள்படும்.

பொருள்கள் என்பதுபோல, நாள்கள் என்பதே சரியானது. ஆனால் பொருட்கள் என்பது செவிக்கு ஏற்புடையதாகத் தோற்றுவதுபோல், நாட்கள் என்பதும் ஓசை கருதி ஆளப்படுகிறது.

பெரும்பெரும் அறிஞர்களே இவ்வாறு ஆள்வதால், இது சிந்தனைக்கு உரியதாகிறது. பெரியவர் மே.வீ.வேணுகோபாலப் பிள்ளை இதை நன்கு விளக்கியுள்ளார். வாள்கள், தாள்கள் என்று சொல்லிப் பாருங்கள். இவை வாட்கள், தாட்கள் என வருமா? அது போல, நாள்களும் நாட்களாக வராது. கள் விகுதி பிற்பட்டதாகலின், இலக்கண நூல்களில் இதற்கு விதி கூறப்படவில்லை.

வாள் + கண் = வாட்கண். நாள் + குறிப்பு = நாட்குறிப்பு. நாள் + காட்டி + நாட்காட்டி. இவ்வாறு ஏனைய இடங்களில் வருவதால், ஒப்புமையாக்க உணர்வில் 'நாட்களும்' வந்துவிட்டது. 'உலகக் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் பதினாறு நாள்கள் நடைபெறும்' என்பதே முறையானதாகும். ஆனால் 'பதினாறு நாட்கள் நடைபெறும்' என்றால்தான் செவ்விய தமிழ்போல் தோன்றுமளவு இது முற்றிவிட்டது 'நாள்கள்' என்னும்போது, ஒலிப்பு ஒரு மாதிரியாகத் தோன்றுவதால், நாட்கள் புகுந்து நிலைத்துவிட்டது போல் தோன்றுகிறது.

பொருளுணர்ச்சி கெடாதவிடத்து, ஒலிப்புக்கு - இன்னோசைக்கு, முன்னுரிமை தந்துள்ளமை இதுபோல் பல இடங்களில் புலப்படுகிறது*

*தினமணியில் 'உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள்' - தொடரை, வாரந்தோறும் எழுதிவந்தபோது, மேற்கண்ட என் கருத்து வெளியிடப்பட்டது. அதைப் படித்த சென்னை நண்பர் எம். ஏ. ராஜசேகரன், அறிஞர் அ.மு.ப. கருத்தாகக் கீழ்வருவதைத் தமது மடல்மூலம் தெரிவித்தார். அது வருமாறு:

''நாட்கள் என்ற சொல்பற்றி, பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம் தமது 'ஏழு நாட்களில் எழுபது நாடுகள்' என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். 'நாள்கள் என்பதுதான் இலக்கண முறைப்படி சரியாயினும் நாட்கள் என்று நான் கொண்டதற்குக் காரணம் காட்டல் வேண்டும்.

'நாள்கள்' என்னும்போது, ஒலியமைப்பில் ஓசை தடைப்படுகின்ற (Hiatus) காரணத்தால், இம்மாற்றம் கையாளப் பெறுகின்றது. 15 ஆண்டுகளுக்கு முன், சென்னைப் பல்கலைக் கழகச் சார்பில், பச்சையப்பன் கல்லூரியில், என் பொறுப்பில் நடைபெற்ற புத்தொளிப் பயிற்சி வகுப்பில் (Orientation Course) பெரும்புலவர் மே.வீ.வேணுகோபால் பிள்ளை உட்படப் பல அறிஞர்களும் இருபது கல்லூரிகளின் பேராசிரியர்களும், பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறையினரும், இரண்டுமணி நேரம் இச்சொல் பற்றி விவாதித்து ஆராய்ந்து, 'நாள்கள்'தான் இலக்கண மரபில் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயினும், ஓசை இனிமை கருதியும், இடையில் ஓசைத் தடங்கல் இன்றிச் சொல்ல வேண்டியும் (இலக்கண நெறியும் அந்த வகைக்கே வழி செய்கின்ற ஒன்றாகலானும்) 'நாட்கள்' எனவும் எழுதலாம் என்று முடிவு செய்தனர். பலரும் அச்சொல்லைப் பயன்படுத்துகின்றனர். எனினும் தமிழாசிரியனாகிய நான் பயன்படுத்துவது தவறு எனச் சிலர் கருதக் கூடும். எனவே இக் குறிப்பினை எழுதினேன்''.

இவ்வாறு ஒரு பெரும் பேராசிரியரே 'பிழையாகக் கருதுமாறு எழுதிவிடக் கூடாது' எனத் தயங்கியதை, எல்லோரும் அறிய வேண்டுமென்றே, விரிவாகத் தரப்பெற்றது. ஒவ்வொரு சொல்லையும் தொடரையும் கூட இவ்வாறு சிந்தித்து எழுதும் பழக்கம் வர வேண்டும். மொழியும் மனிதனின் படைப்பே. அதில் குறையுமிருக்கும்; 'நிறையுமிருக்கும்'. எனினும்

மரபு - வழிவழி மரபே - அதன் உயிர். தவறென்று தள்ளி விடக்கூடாது. Hour என்று போட்டு 'அவர்' என ஒலிப்பதா? Colour என்பதைக் 'கலர்' என்று உச்சரிப்பதால் Color போதாதா? எதிர்வினாக் கேட்க இடமில்லை. மொழி மரபு அது.

இடம் நோக்கி நாள்கள் என்றோ, நாட்கள் என்றோ எழுதலாம். இங்ஙனம் விவாத அரங்காக மாறுமிடங்களும் பலவுள. ஆயினும் கருதிக் கருதிப் பார்த்துப் பார்த்துப் பிழைகளைந்து எழுதும் மனப் பழக்கம் இருந்ததை இது காட்டும். இனியும் அப்பழக்கம் தொடர வேண்டும் என்பதை இது வலியுறுத்தும். அடிக்கடி நேரும் தவறுகளில் இது ஒன்றுபோல் தோன்றினும் இது பற்றி நிரம்பச் சிந்தித்துள்ளனர் அல்லவா? இம்மனப் பழக்கம் இன்றைய அறிஞர்களிடத்தும் படைப்பாளிகளிடத்தும் உண்டாதல் வேண்டும். மொழிச்செப்பம் பேணாமல் கிண்டல் செய்பவர்களை எவ்வளவு கடிந்தாலும் தகும். ஒரு மொழியை எப்படி வேண்டுமானாலும் எழுதலாம் என்ற 'அலட்சியப் புத்தியை' வளர்ப்பவர்கள், நாலடியாரில் 'நாய்கள் அனையர்' என உவமை கூறியுள்ளதற்குப் பொருத்தமானவர்கள். இந்நாய்கள் குரைப்பது கூடாது. இதை நாம் சொல்லவில்லை. நாலடியார் நூல் சொல்கிறது.

## 31 வாழ்க வளமுடன்

'அளவோடு பெற்று வளமோடு வாழ்க' என்பது அரசு விளம்பரம். 'வாழ்க வளமுடன்' என்று பெரியவர்களும் ஆசி கூறுகின்றனர்.

மகர ஈற்றுச் சொற்களுக்குப் பிறகு, வேற்றுமை உருபு வரும்போது, அத்துச் சாரியை வரும்.

நிலம் + ஐ = நிலத்தை (நிலம் + அத்து + ஐ). இதுபோல் நிலத்தில், நிலத்திற்கு எனவரும். நிலம் + ஐ = நிலமை என வராது. நிலம் + இல் = நிலமில் என வராது. வடம் - வடத்தை. இடம் - இடத்தில். ஒரு பெண் குடத்துடன் வருவாளே தவிர, குடமுடன் வரமாட்டாள். நாம் தடத்திலேயே போக வேண்டும். தேர்வடத்தைப் பிடிப்பர்.

இவ்வாறு அத்துச் சாரியை சேர்த்தே வருவதால் சொல் உச்சரிப்பு எளிமை பெறுகிறது. சில போது மூன்றாம் வேற்றுமை உருபுகள் (ஒடு, ஓடு, உடன்) வரும்போது 'அத்து'ச் சேர்த்தும் சேராமலும் வருகின்றன.

வளமொடு, வளமோடு, வளமுடன்

வளத்தொடு, வளத்தோடு, வளத்துடன்

'தாங்கள் நலமுடன் இருப்பதறிய அவா' என மடல் எழுதுகிறோம். இவ்வாறு இரண்டுவிதமாகவும் வருவதை 'உறழ்ந்து வரும்' என்பது இலக்கணம். புதுச்சேரித் தமிழறிஞர் இரா. திருமுருகன் தக்க சான்றுகள் காட்டி 'உறழ்ந்து வரும்' என எழுதியுள்ளார். ஆக்கமொடு, காலமொடு எனத் தொல்காப்பியத்திலும் உலகமொடு, நயமுடன் என இலக்கியங்களிலும் வருகின்றமை காட்டப்பெற்றுளது.

வளத்துடன் வாழ நலத்துடன் செயற்படும் மனத்துடன் யாவரும் திகழ்ந்தால், இனத்துடன் ஒற்றுமைப்படலாம்.

இதையே, 'வளமுடன் வாழ நலமுடன் செயற்படும் மனத்துடன் யாவரும் திகழ்ந்தால், இனத்துடன் ஒற்றுமைப் படலாம்' என்றும் எழுதலாம். இடம் நோக்கி - ஓசையினிமையும் பொருளுணர்ச்சியும் கெடாமல் கருத்துப் பரிமாற்றத்திற்கு உதவுவது மொழி. அதன் இயல்பு அறிந்தவர்கள், தம்மை மறந்தும் தவறு செய்ய மாட்டார்கள்!

எனவே, வாழ்க வளமுடன் என யாவரும் நலமுடன் வாழ வாழ்த்துவோம். 'உலகெலாம் பரவிய உயர்மொழித் தமிழர், நலமெலாம் பெற்று வளத்துடன் வாழ்கவே' என்றும் பாடுவோமாக! அரசுகளும் அரசியலாரும் தமிழைச் சிதைப்பதைக் கண்டு கொள்வதுமில்லை; கண்டிப்பதுமில்லை; அதுபற்றிக்கவலைப்படுவதுமில்லை. அவர்களைப் பற்றி நாம்தான் கவலைப்பட வேண்டியுள்ளது! அவர்களையும் வாழ்க வளமுடன் என வாழ்த்துவோமாக!

## 32 செலவு

அடிக்கடி நேரும் பிழைகளுள் ஒன்று செலவைச் சிலவு என்பது. கையை விட்டுப் பணத்தைச் செலவழிப்பதால், அது செலவாகிறது.

ஊரைவிட்டு வெளியூருக்குச் செல்வதையும் 'செலவு' என்றனர். முன்பு 'எனது இலங்கைச் செலவு' என்பது, திரு.வி.க. தமது இலங்கைப் பயணம் பற்றி எழுதிய நூலின் பெயர். கைச்செலவுக்குப் பணம் தேவை. பெருஞ்செலவுக்கு எங்கே போவது? செலவு மீறினால் கையைக் கடித்துவிடும்.

செலவு சிட்டையைப் பல வணிகர்கள் 'சிலவு சிட்டை' என்றே அச்சடிக்கின்றனர். நாட்குறிப்பு முதல் பேரேடு வரை சிலவு என எழுதுவதும் சிலவு சிட்டை என்பதும் வணிகர்களிடம் வழக்கமாகிவிட்டதற்கு, அச்சிட்டைகளையும் ஏடுகளையும் அச்சடிப்பவர்களே காரணம். கணக்குப் புத்தகத்தில் வரவு செலவு என்றே அச்சிடவேண்டும். 'சிலவு' பெருவழக்காகியிருக்கும் தவறுகளில் ஒன்று. அதைத் திருத்திச் 'செலவு' என்றே எழுத வேண்டும். செலவிலிருந்துதான் 'செலாவணி' எனும் வழக்குச் சொல் வருகிறது. சிலவு பொருளற்ற சொல். அதைச் 'செலவு' செய்து கை கழுவி விட வேண்டும்.

## 33 முயல்வோம்; முயற்சிக்கல் ஏன்?

நான் முயற்சித்தேன். அவர்கள் முயற்சித்தார்கள். இனிமேல்தான் முயற்சிக்க வேண்டும். அடிக்கடி நேரும் தப்பு இது.

நான் முயன்றேன். அவர்கள் முயன்றார்கள். இனிமேல்தான் முயல வேண்டும். இவையே சரியானவை.

முயல் - முயன்றேன் - முயலுதல் - முயற்சி. முயற்சி எனும் தொழிற்பெயரை, முயற்சித்தேன் ஆக்கி வினையாக்குவது வீண்முயற்சி.

பயில் - பயிலுதல் - பயிற்சி. இது பயிற்சித்தேன் ஆகுமா?

நவில் (சொல்) - நவிலுதல் - நவிற்சி. இது நவிற்சித்தேன் ஆவதில்லை. நவின்றேன் (சொன்னேன்) என்றுதான் வரும். எனவே நெறிப்பட எழுதவே

முயல்வோம்; முயற் 'சிக்கல்' வேண்டாம். முயற்சி இருக்கும்போது சிக்கல் எதற்கு? தமிழை முறையாக எழுதவே முயல்வோம்.

## 34 காஞ்சிபுரம் தமிழைக் காக்கட்டும்

ஒரு பல்கலைக்கழக அழைப்பிதழில் 'காஞ்சீபுரம்' என்று அந் நகரின் பெயர் திரும்பத் திரும்பக் குறிக்கப்பட்டிருந்தது. அது 'காஞ்சிபுரம்' எனக் குறிக்கப்படுவதே பொருத்தமுடையது. பேச்சுவழக்கில் நீட்டி ஒலிக்கும் பழக்கம் ஏற்படுகிறது. 'காஞ்சீபுரத்துக்கா' என்று கேட்பவரும், எழுதும்போது காஞ்சிபுரம் என்றுதான் எழுத வேண்டும். புடைவையைப் பார்த்ததும் காஞ்சிபுரமா என்று, நீட்டாமல் கேட்பவரும் பலருளர்.

காஞ்சிமாநகர் சங்ககாலம் இடைக்காலம் இக்காலம் மூன்றிலும் புகழ்பெற்றது. காஞ்சி என்ற மரத்தின் பெயரால் வந்த பெயர் அது. 'காஞ்சி ஊர' என்பது அகநானூறு *(96)*. 'காஞ்சிமரம் நிறைந்த மருதநில ஊரனே' என அழைப்பது அது. மணிமேகலை பல இடங்களில் 'காஞ்சி மாநகர்' என்றே சுட்டுகிறது *(21-148, 154)*. தேசியக் கவிஞர் பாரதியார், 'காசிநகர்ப் புலவர் பேசும் உரைதான், காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்' எனப் பாடுகிறார்.

இதனை முத்தொள்ளாயிரமும் பெரும் பாணாற்றுப் படையும் 'கச்சி' என்றே வழங்கும். அதுவும் 'காஞ்சி' என்பதன் திரிபேயாகும். அது ஒரு செய்யுள் நடை. வட மொழியில் இதைக் 'காஞ்சீ' எனக் குறித்தாலும் தமிழில் - மூலச்சொல் 'காஞ்சி'யே. 'காஞ்சீ' என அதில் ஈ மொய்க்க விடுவது நலந்தராது. காஞ்சிபுரம் கூட்டுறவுப்

பட்டு மாளிகைகள் தழைக்கட்டும். அது காஞ்சீ - ஆகித் தமிழுக்குச் சொற் பிழையை வளர்க்க வேண்டாம்.

## 35 நாகரிகம் பேணுவோம்

நாகரிகம் என்ற சொல்லை நாகரீகமாக்குவதும் நாகரிகம் ஆகாது. இதுவும் பேச்சு முறையில் வந்த திரிபேயாகும். இதன் பழைய ஆட்சிகள் எல்லாம் 'நாகரிகம்' என்றே உள்ளன. திருவள்ளுவரும் 'நயத்தக்க நாகரிகம்' என்பார் (580) நற்றிணை முதற்பாடலில், கபிலர் 'நனி நாகரிகர்' என்று, நாகரிகம் உடையவர்களைக் குறிப்பிடுவார். அருணாசலக் கவிராயர் இராம நாடகத்தில் 'நாகரீக வேடிக்கை' என்றது, இசையோடு பாடியதால் வந்த நீட்சியே. ஆனால் இன்று பலரும், அடிக்கடி 'நாகரீகம்' என்றே எழுதுவது பிழை. அவர்கள் திருத்தமுறத் 'தமிழ் நாகரிகம்' பேண வேண்டும் என்பதே நம் விருப்பம். பேச்சில் நீள்வன எல்லாம் எழுத்தில் இடம்பெறுதல் தவறு. 'காஞ்சீ' என்பதிலுள்ள ஈப் போலவே, நாகரிகத்திலும் 'ஈ' மொய்க்கிறது. அதைத் தவிர்ப்போம். நாகரிகம் வளர்த்த காஞ்சிபுரத்தைத் தமிழ்காக்கும் நகரமாக்குவோம்.

## 36 காந்தியம்

பேச்சில் எத்தனையோ ஒலித்திரிபுகள் உள்ளன. கொச்சை வழக்குகள் காணப்படுகின்றன. அவற்றை எழுத்து வழக்கில் தவிர்ப்பதே மொழியைக் காக்கும். மொழியைக் காப்பது மொழிக்காக அன்று; நமக்காக. தெளிவாகக் கருத்துப் பரிமாற, மொழிச் சிதைவு

பயன்படாது. தமிழ் இருவழக்கு மொழி. எழுதுவதுபோல் பேசினால் அதைக் கேலிசெய்யும் 'சிலதுகள்', பேசுவதுபோல் எழுதித் தமிழைச் சீர்குலைக்கின்றன. பேசுவதுபோல் எழுதவே கூடாது. பேச்சு வழக்கு வட்டாரத்திற்கு வட்டாரம் வேறுபடும். சாதிக்குச் சாதி வேறுபாடும் உண்டு. தமிழ் தோன்றிய காலந்தொட்டு இருவழக்கு மொழி. எழுதும்போது கட்டளை மொழியில்தான் எழுத வேண்டும். பேசுவதுபோல் எழுதினால் 'கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்போல்' தமிழ் மேலும் பல மொழிகளாகிப் பொது மொழி - கட்டளைமொழி அழியும். அதைத்தான் தமிழ்ப்பகை எதிர்பார்க்கிறது.

காந்தியம் என்பதைக் காந்தீயம் என எழுதுவது தவறு. 'இயம்' என்பது ஒருவகை இறுதிஒட்டு. நாட்டியம், காப்பியத்திலும் இந்த இயம் முன்பே உளது. இன்று இது பிறமொழிச் சொற்களைத் தமிழியமாக்க மிகவும் பயன்படுகிறது. இயம் ஈயம் ஆகாது; ஆகக் கூடாது. காந்தீயம் என நீட்டுவது மங்கலமாகவும் தோன்றவில்லை. காந்தியடிகளின் கொள்கை, கருத்து, பண்பு, வாழ்வுநெறி அனைத்தையும் 'காந்தியத்துள்' அடக்கிவிடலாம். அதைப் போய்க் காந்தீயம் என எழுதினால், அவரே வருந்துவார்.

## 37 தேசியம்

நமது தேசியமும் இவ்வாறு தேசீயமாகித் தடுமாறுகிறது. தொழில்களைத் தேசியமயமாக்கித் தோல்வி ஏற்பட்டுவிட்டது தீவினையே. அதைத் தேசீயமயமாக்குவது மொழிக்குக் கேடு. பாரதியார்

பாடல்களின் செவ்விய பதிப்பில் 'தேசிய கீதங்கள்' என்றே காணப்படுகிறது. தமிழ்த் தேசியம் பற்றி இன்று ஆழமாகப் பேசப்படுகிறது; உணரப்படுகிறது. ஏன்? இந்தியத் தேசியம் பல தேசிய இனங்களின் கூட்டமைப்பு. இது ஒருதுணைக்கண்டம். எனவே தேசிய ஒருமைப்பாடு, தேசிய ஒற்றுமை என்றாலே போதும். இங்கெல்லாம் 'தேசீயம்' என்று வால் நீட்டவேண்டாம்.

முன்பு இது **தினமணி**யில் வெளிவந்தபோது, தமிழ்ப்பேரகராதியைச் சுட்டிக்காட்டித் தேசிய, தேசீய எனும் இரு சொற்களையும் ஏற்கலாம் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அதைப் பார்த்த பேராசிரியர் **க.த.திருநாவுக்கரசு, தினமணி**க்கு எழுதிய வாசகர் கடிதம் *1-3-89*இல் வெளிவந்தது. அது வருமாறு :

''இருபதாம் நூற்றாண்டின் உலகச் சிந்தனையில், பல இசங்கள் (Ism) இடம்பெற்றுள்ளன. *1921*இல் மார்ச்சிசம் (Marxism) எனும் சொல்லைத் தமிழாக்கம் செய்த திரு.வி.கலியாண சுந்தரனார், 'இசம்' எனும் பிறமொழி விகுதியை, இயம் என்று தமிழாக்கம் செய்தார். அவரே *1923*இல் 'நேஷனலிசம்' என்பதைத் 'தேசியம்' எனவும் *1929*இல் **Gandhism** எனும் சொல்லைக் 'காந்தியம்' எனவும் தமிழாக்கம் செய்து முதன்முதல் தமிழில் வழங்கினார். அதுமுதல் பல்வேறு 'இசங்'களைத் தமிழ்ச் சொல்லாக்கம் செய்துவரும் அறிஞர்கள் 'இயம்' எனும் 'பண்புப் பெயர் விகுதிகளைப்' பயன்படுத்தி வருகின்றனர். மொழியியல் அடிப்படையில் புதியதமிழ்ச் சொல்லாக்கம் செய்கிறபொழுது சீர்மை (uniformity) கருதி, 'Ism' என்பதை எல்லோரும் 'இயம்' எனவே

வழங்கிவருகின்றனர். காந்தி + இயம் = 'காந்தியம்' எனத்தான் அமையும். காந்தி + ஈயம் என அமையாது. 'காந்தீயம்' என்று வழக்கில் 'ஈயம்' இடம்பெறுவது தவறு. இதைப் போன்றதுதான் 'தேசியம்' என்பதுமாகும். தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon) ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர்த் தொகுக்கப்பட்டது. அதைத் தொகுத்த அறிஞர் பெருமக்கள் மரபு வழிப்பட்ட இலக்கண இலக்கியப் புலவர்களாவர். புதியதாகத் தமிழாக்கம் செய்யப்பட்டு வரும் சொற்களுக்கோ, சொல்லமைப்பிற்கோ அவர்கள் பேரகராதியில் இடம் தரவில்லை. எ-டு. மறுமலர்ச்சி.

இப்பொழுது 'தேசிகம்' எனும் சொல்லைக் காண்போம். 'தேசிகம்' என்னும் சொல்லை அடியார்க்கு நல்லார் போன்ற உரையாசிரியர்கள் பயன்படுத்தியுள்ளனர். 'தேசிகம்' என்பதற்குப் பொருள் 'தேசத்திற்குரியது' (Native) என்பது. கூத்துவகையில் 'தேசிகக் கூத்து' தமிழ்நாட்டிற்குரியது. ஆரியக்கூத்து என்பதிலிருந்து வேறுபடுகிறது என்பதை அவர்கள் புலப்படுத்தியுள்ளனர்.

வடமொழியிலுள்ள 'ஜ'வைத் தமிழாக்கம் செய்கிறபொழுது 'ய'வாகத் திரித்து வழங்குவது மரபு. எ-டு. பங்கஜ - பங்கயம். இதைப்போன்று 'தேசிக' எனும் சொல்லிலுள்ள 'க'வைத் தமிழ்ப்படுத்தும் பொழுது 'ய'வாகக் கொண்டனர். இதனால் 'தேசிகம்' - 'தேசியம்' என ஆயிற்று. தொல்காப்பியனாரின், 'வடசொற்கிளவி' வடவெழுத்து ஒரீஇ, எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே' எனும் விதிப்படியே தேசிகம் - தேசியம் என்று உரையாசிரியர்களால் வழங்கப்பெற்றது. இதே விதியைக் கருத்தில் கொண்டு, திரு.வி.க.

அவர்களும் 'தேசியம்' எனும் சொல்லாக்கத்தைச் செய்துள்ளார். ஒரு சொல் வடிவிற்கு இரண்டு, மூன்று பொருள்கள் வழங்குவது தவறா? வளரும் மொழிகள் அனைத்திலும் இப்பண்பினைக் காணலாம்.

எனவே தேசியம் = (1) நாட்டுப்புறத்தன்மை (2) தேசிய உணர்வு என இரு பொருள் விளக்கம் தருவதில் என்ன தவறு? 'தேசீயம்' எனத்தான் எழுதவேண்டும் என்பது, புதிய தமிழ்ச் சொல்லாக்க விதிகளுக்கு முரணானது. 'ஆன்மிகம்' எனும் தமிழ்ப்படுத்தப்பட்ட சொல்லை, 'ஆன்மீகம்' என அறியாமையால் எழுதுவதைப் போன்றதே, 'தேசீயம்' எனும் வழக்கு. எனவே பேராசிரியர் **தமிழண்ணல்** குறிப்பிட்டுள்ள வடிவமே தமிழ் மரபிற்குப் பொருந்துவதாகும்.''

ஓர் உண்மை பல உண்மைகளுக்கு வழிகாட்டுகிறது. 'சொல்லில் உயர்வு தமிழச்சொல்லே, அதைத் தொழுது படித்திடடி பாப்பா' என்று பாடினால் போதாது. பேராசிரியர் **க.த. திருநாவுக்கரசின்** இவ்விரிவான விளக்கத்தை, அவ்வாறே பதிப்பித்த தமிழ் இதழியல் முன்னோடி, அறிஞர் **ஐராவதம் மகாதேவன்** பாராட்டுக்கு உரியவர். ஒரு நல்ல மனப்பழக்கம், பல நல்ல பழக்கங்களுக்கு வழிவகுக்கும். பிழையின்றி எழுதுவது பற்றிய இந்நீண்ட சிந்தனை, நல்லதொரு மனப்பழக்கத்தை உண்டாக்கும். தமிழில் எப்படியும் எழுதலாம் என்ற மனப்போக்கு குறையவேண்டும். ஒரு பொய் பல பொய்களைச் சுமந்து வரும். அது போல ஒரு பிழை பல பிழைகளுக்கு வழிகாட்டும். ஒரு தீமை, பல தீமைகளுக்கே, இட்டுச்செல்லும். 'வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்' என்பார் ஔவையார். கருத்து வேறுபாடு

வருகிறதே என மயங்குதலும் தவறு. வேறுபாடு வருகிறதென்றாலே, நல்ல திசைநோக்கிச் சிந்திக்கத் தொடங்கிவிட்டோம் என்றாகிறது.

எதையும் திருத்தமுற வைத்துக்கொள்ள ஆர்வம் காட்டுகிற நாம், மொழியையும் திருத்தமுறக் கையாள வேண்டாமா? அஃது அறிவின் அடையாளமாயிற்றே.

## 38 தடைப்படாமல் தமிழ் வளர்க

தமிழ் தடைப்படாமல் வளர வேண்டுமேல், தமிழுடன் பழக வேண்டும். ஒரு மொழியைப் பயன்படுத்த வேண்டும், படிக்க எழுத சொல்ல வழங்க முயன்றபடி இருக்கவேண்டும்.

புழக்கத்திலிருக்கும் பொருள்தான் பழுதுபடாது. மூலையில் போடப்பட்ட இரும்புதுருப்பிடித்துவிடும்.

பிறமொழிப் புழக்கத்தால் தமிழ்ச்சொற்கள் மூலையில் முடங்கிக் கிடக்கின்றன.

தமிழ் வளர்ச்சி தடைப்படுகிறது. நாட்டு முன்னேற்றம் தடைப்படுவதேன்? தடைப்படாத வாழ்வு வேண்டும். அவன் போக்கைத் தடைப்படுத்த வேண்டாம். படிப்பைத் தடைப்படுத்துவது தவறு. சிலபோது, 'தடைபடாமல் காக்க' என்று, ஒற்றின்றி எழுதுவது, சொல்வது ஒலியினிமை கருதி, அவ்வாறு வந்துவிடுகிறது. தடைப்படாமல் என்பதே சரியான சொல் 'கடைப்பட்ட நாயேனை' என்று நாயன்மார் உருகுவர். தலைப்பட்ட, இடைப்பட்ட, கடைப்பட்ட என்பது போன்றதே தடைப்பட்ட என்பது. தடு + ஐ = தடை. தொழிற்பெயர்.

ஐயம் வரும்பொழுது ஓரினச்சொற்களையும் தொடர்பினச் சொற்களையும் ஒப்பிட்டுப் பார்த்துத் தெளிவுபெற வேண்டும்.

உடைபடுதல், தடைபடுதல், அடைபடுதலில் வினையும் துணைவினையும் சேர்கின்றன. அங்கு ஒற்று இடையில் வராது. அணை உடைபடும் - உடைப்படாது. தயிர் கடைபடும் - கடைப்படாது. தடை - தடைப்படும் எனவும் வருகிறது. தமிழ் வளர்ச்சி தடைப்படாமல் காப்போமாக.

## 39 மேன்மேலும்

மேன்மேலும் உழைக்க வேண்டும். மேன்மேலும் தவறு செய்துகொண்டே போனால் மொழி என்னவாகும்? மேன்மேலும் கடன் வாங்குவது தவறு. மேன்மேலும் செலவு வந்துகொண்டே இருக்கிறது.

சிலர் இதை 'மென்மேலும்' என எழுதிவிடுவது தப்பு. மேலும்மேலும், மேன்மேலும் என்பன அடுக்குத் தொடர்கள்.

அடுக்குத் தொடரில் இரண்டு சொற்களும் ஒரே சொல் வடிவாய் இருக்கும். தீதீ, பாம்புபாம்பு எனக் காட்டுவர். மென்மேலும் என்பதில் அவ்வாறு அமையவில்லை. அது தவறு, அப்பட்டமான பிழை.

எனவே மேலும்மேலும் சிந்தித்துச் சொல்லி எழுதிப் பழகினால் தமிழ்மொழி மேன்மேலும் சீர்மை பெறும்.

## 40 பழனி முருகன் காக்க

பழனியின் பழைய பெயர் பொதினி என்பது. பொதினியை மக்கள் அன்றாடப் பேச்சில் திரித்துப் பழனி ஆக்கிவிட்டனர்.

அது பழநி ஆகிப் பிறகு பழம்நீ ஆகிப் பல தெய்விகப் புராணக் கதைகளும் தோன்றலாயின.

பழனி என்பதே பொதினியுடன் தொடர்புடைய வடிவம். அதை மீண்டும் பொதினி ஆக்க முடியாவிட்டாலும் தொடர்புடைய பழனியாவது காக்கப்படலாம்.

வேளிர் ஓவியர் ஆவியர் போல்வன மிகப் பழைய அரச குடிகள். போராற்றல் மிக்க நெடுவேளாவி பொதினியை ஆண்டதாக மாமூலனார் அகநானூற்றில் இரண்டு இடங்களில் குறிப்பிடுகிறார் (1,61), வையாவிக் கோப்பெரும்பேகனும் இவ் 'ஆவியர்குடி'யைச் சேர்ந்தவனே (புறம்.147) ஆவிநன்குடி என்பது இவர்களது தலைநகரின் பெயராக விளங்கியது. ஆய்குடியும் ஆவியர் குடியும் தொடர்புடையன போலும். ஆய்குடியினர் ஊர் ஆய்குடி - ஆயக்குடியாகியுளது.

'முருகன் நற்போர் நெடுவேள் ஆவி' (அகம்1) என்பதால், முருகனைப் போல நல்ல போரிடலில் வல்ல மன்னன் 'வேள் ஆவி' எனத் தெரிகிறது. ''பொதினி - ஆவியின் மலை. பழனி'' - என்பது நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டரின் அகநானூற்று உரை. இன்றைய நிலையில் பழனி, பழநி என இரு வகையாகவும் மக்கள் வழங்கினாலும் பழனி என்பதே

பழைய பெயருடன் ஒட்டியதெனத் தெரிந்துகொள்வது நல்லது.

இவ்வாறு தமிழகத் தெய்வப் பெயர்கள், மக்கட் பெயர்கள், ஊர்ப்பெயர்கள், ஆற்றுப் பெயர்கள் முதலானவை பல சிதைத்தும் உருமாற்றியும் வட மொழியாக்கப்பட்டும் உள்ளன. இவற்றைச் செம்மைசெய்து மாயவரம் (மாயூரம்) மயிலாடுதுறையானதுபோல் திருந்தியவடிவில் வழங்குமாறு செய்தால் நல்லது. ஆள்பவர் கருத்துச் செலுத்த வேண்டும். தமிழக இன்றைய தலைவர் பெரும்பான்மையர் இவற்றிலெல்லாம் கருத்துச் செலுத்துமளவு வளர்ந்திலர். அது நமது தவக்குறையே. தன்னல மற்ற தலைவர்களைத் தந்து பழனி முருகன் காப்பாராக!

## 41 சிலை திறப்பு

சிலையைத் திறந்தனர், சிலை திறக்கப் பெற்றது, சிலை திறப்பு - இவ்வாறு வரும்.

சிலைத் திறப்பு என்பது பிழை. விலையைக் கேள்-விலை கேள். கலையைப் பயில் - கலைபயில். சிலையைத் திற - சிலை திற.

சொல்லிப் பார்த்தாலே ஒற்று மிகுவதாலும் மிகாததாலும் பொருள் வேறுபடுவது விளங்கிவிடும். சற்று ஆரஅமரச் சிந்தித்துச் சொல்லிப் பார்க்க வேண்டும்.

அகத்தியர் கடலைச் சாப்பிட்டார்; அகத்தியர் கடலை சாப்பிட்டார். 'ச்' போடுவதால் கடலையே சாப்பிடுகிறார். 'ச்' போடாததால் நாம் சாப்பிடும் கடலையை மட்டுமே சாப்பிடுகிறார்.

ஒற்று மிகுவது பொருளை வேறுபடுத்தும் இடமும் உண்டு; வெறும் ஒலிச்சேர்க்கைக்காக ஒற்றுமிகுவதுமுண்டு.

கைபிடி வேறு; கைப்பிடி வேறு; தங்க குடிசை வேண்டும், தங்கக் குடிசை வேண்டாம். தங்க - இக்கால வழக்கில் விட்டிசைப்பதே நல்லது. தந்த கட்டில் வேறு; தந்தக் கட்டில் வேறு தானே?

காட்டுக்குப் போ, நாட்டைக் காக்க, கதவைத்திற - இங்கெல்லாம் ஒற்று, ஒலிஇணைப்புக்கு மட்டுமே பயன்படுகிறது. மலைப்பொழிவு, தலைச்சோறு - ஒற்றை விட்டால் பொருள் மாறிவிடும். இங்கு பொருளுணர்ச்சியே முதலிடம் பெறுகிறது.

பெரிதும் எழுவாய் போல வருமிடங்களில், அதாவது செய்பவனும் செய்யப்படுவதுமாக வருவனபோல் ஆளப்படும் போது ஒற்று மிகுவதில்லை. பாம்பு பிடி, நாடு திரும்பினான், கரும்பு சாகுபடி செய்யப்பட்டது, விடுப்பு கழிந்துவிட்டது, பயறு காய்த்துளது, செருப்பு தேய்ந்துவிட்டது.

ஒரு சொல் நீர்மைத்தாகச் சொல்ல வேண்டியபோது ஒற்று மிகுகிறது; மெய்ம்மை, செய்ந்நன்றி, பாம்புக்கடி, சாரைப்பாம்பு, செல்வச்சீர்.

இவ்வாறு சொல்லிப் பார்த்தும் பொருளை உணர்ந்தும் ஒற்றுப் போடுமிடத்தையும் போடக் கூடாத இடத்தையும் மக்கள் கண்டுகொள்ளுமாறு சில வழிகாட்டுதல்களைத் தந்தாலே போதும்.

மொழிப்பழக்கம் கடினமன்று; மிக எளிதானது. ஒவ்வொன்றற்கும் குறைந்தது பத்து உதாரணங்கள் தந்தாலே போதும். இலக்கணத்தை முதலில் சொல்ல வேண்டாம். அதுதானே புலப்பட்டு விடும்.

## 42 ஒருகால்

ஒருகால் தலைவர் வராவிட்டால் என்ன செய்வது? ஒருகாலும் அது நடவாது. ஒருகாலே முடித்துவிடுக; மறுகால் என்பது நடவாது.

ஒருகால், இருகால் என்பன ஒருமுறை, இருமுறை அல்லது ஒருசமயம், இரண்டு சமயம் என்ற பொருள்களில் வழங்குகின்றன. இதனை ஒருவேளை இது நடைபெறா விட்டால்' என்பதுண்டு. ஒருகால், ஒருவேளை ஒரு பொருளன.

வெண்பா 'இருகாலிற் கல்லானை' என்பது ஔவை வாக்கு. 'இருகால் கேட்பின்', 'முக்கால் கேட்பின்' பல்கால் பயின்று' என்பன முறையே இரண்டு முறையும் மூன்று முறையும் பலமுறையும் பாடங் கேட்டல் பற்றியது. 'ஒருகாற் கேட்ட துணையானே' என்பது நன்னூல் உரை.

'மறுகால்' எனவும் ஒருசொல் உளது. 'மறுகா'ல்' வந்தானா என வினவுவர்.

இவற்றை ஒருக்கா, இருக்கா, மறுக்கா எனத் திரித்து வழங்குவது பேச்சுவழக்கு. ஒருகால் என்பதை ஒருக்கால் என்றாலும் மறுகா(ல்) என்பதை மறுக்கால் எனத் திரிப்பதில்லை. செவ்விய வடிவங்களையே நாம்

பயன்படுத்த வேண்டும். ஒருகால் அன்று; இருகால் அன்று; பலகாலும் இதை வற்புறுத்துகிறோம்.

## 43 சிவப்பு

சிவப்பு செந்நிறத்தை முதலிலும் கோபத்தால் முகம் சிவப்பதை அடுத்தும் உணர்த்தும். சிவந்த, சிவப்ப, சிவந்தது முதலான பல சொல்லாட்சிகள் உள. சிவப்பு நிறம், சிவப்பு மனிதர்கள், செவ்விந்தியர்கள் என வழங்கும்.

சிகப்பு பேச்சு வழக்கில் திரிந்து வந்தது. சிவப்பே முறையான சொல். செம்மை, செக்கர் (வானம்), செவலைக் காளை, செம்மண், செங்குன்றம் என வருவன பல. கன்னங்கரேர், வெள்ளை வெளேர், பச்சைப் பசேர் போலச் செக்கச் செவேர் என்ற தொடர்ச்சொல் (phrase) வடிவத்தைக் காணலாம். சேயோன் - சிவந்த நிறமுடையவன். செக்கச் சிவக்க வெற்றிலை போடுவதாக ஒரு தொடருண்டு. மிக்க சிவப்பைச் குறிக்கும் அடுக்குத் தொடர் இது.

## 44 கருப்பு

கருப்பு கரிய நிறத்தைக் குறிக்கத் தொன்று தொட்டு வழங்கிவந்துளது. கரி, கரிது, கரிய, கரியும் என்பன போன்ற துணை வடிவங்களால் இதை அறியலாம். கரு எனும் அடைமொழி (கருவிழி), கரு விரலூகம் (கருங்குரங்கு), கருமுகில் எனக் 'கரு' அடைமொழி பெற்ற சொற்கள் பலவுள. கரும்புள்ளி, கரும்புல் எனக் 'கரும்' அடைமொழி பெறுவனவும் உள.

கருங்குழலி, கார்குழலி என்பனவும் காண்க. கருமுகில் சூழும் காலமே கார்காலம்.

ஆனால் 'கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள' என்றும் 'நிறத்துரு உணர்த்தற்கும் உரிய என்ப' (855, 856) என்றும் உரிச்சொல்லாகத் தொல்காப்பியம் கூறுகிறது. இதிலிருந்து 'கறுப்பு' எனும்சொல் முதலில் கடுஞ்சினத்தைக் குறித்துப் பிறகு கருப்பு நிறத்தையும் குறித்ததாகக் கருத இடமுளது. கறுத்த - சினந்த (பதி. 26-12), கறுத்து - பகைத்து (மது.347), கறுத்தோர் - சினங்கொண்ட பகைவர் (அக. 81,111) எனக் கடுஞ்சினம் பற்றி வருகின்றன. கறுப்பு - கருநிறமடைய (குறி 227, புற 120, மது 271) என நிறம் பற்றி வருகிறது.

கடுஞ்சீற்றத்தால் மலர்முகம் மேலும் சிவக்கும்; கண்ணில் சிவப்பு ஏறும். சீற்றம் காரணமாக முகம் கறுப்பதும் உண்டு. முன்னைய கறுப்பு மேலும் கூடும். இதனால் சிவப்பும் கறுப்பும் சீற்றத்தையும் சீற்றத்தால் வரும் நிறத்தையும் மட்டுமே குறிப்பது அருஞ்சொல் வழக்காகும். உரிச்சொல் அருஞ்சொல்; குறிப்பாகப் பொருள் உணர்த்துவது. கறுப்பன் எனும் தெய்வப்பெயர் கோபத்தால் கறுத்ததையே குறிக்கும். பொதுவாக நிறத்தை மட்டுமே குறிக்கும் சொல் கருப்பு என்பதே. பெருவழக்குடையதும் இதுவே.

கறுப்பணசாமி என்பது, கையில் வாளுடன் இருக்கும் அதன் சினமிக்க தோற்றத்தை வைத்துக் கூறப்படுவது. அக்கருப்பணசாமி கறுப்பாக இருப்பதும் அதன் மெய்ப்பாடேயாகும். அதை விடுத்துக் கருப்பன், கருப்பணசாமி என்றால், கரிய நிறமுடையவன் என்பதை

மட்டுமே சுட்டும். கரிய திருமால், கறுப்பர் ஆவதில்லை. 'நின் சிறுவர் நால்வரினும் கரிய செம்மல் ஒருவனைத் தந்திடுதி' என்று விசுவாமித்திரர் தயரதனிடம் கேட்கிறார். (கையடைப் படலம்)

கறுப்பும் சிவப்பும் உரிச்சொல்லாய்க் கடுஞ்சீற்றத்தையும் வெகுளியையும் குறித்து, அதனால் முகமும் கண்ணும் சிவந்து கறுத்து - நிறத்து 'உரு' காட்டுவது செய்யுள் (கவிதை) வழக்கு. உரிச்சொல் மரபு.

கருநிறம் ஒன்றே காட்டும் பெருவழக்குச் சொல் கருப்பு என்பதேயாம்.

## 45 பன்னிரண்டு

பத்து + இரண்டு = பன்னிரண்டு. இதைப் பலர் பன்னிரெண்டு என எழுதிவிடுவது தவறு. 'இரண்டு' என்பது பேச்சுவழக்கில் ரெண்டு என ஆகிறது. இந்த நினைவில் வருவது பனிரெண்டு. அது தவறுபட்ட வழக்கு. பன்னிரண்டே சரியானது. இலக்கணப்படி பன்னிரண்டு ஆவதை, பனிரண்டு என்பதும் உண்டு. 'பன்னிரு கையும் பாற்பட இயற்றி' என்பது திருமுருகாற்றுப்படை. ஆறுமுகமும் பன்னிரண்டு கையும் உடையவன் முருகன். பனிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை வருவது மாமாங்கம்.

## 46 மாமல்லபுரம்

தமிழக ஊர்ப்பெயர்கள், ஆற்றுப்பெயர்கள் எல்லாவற்றையும் வடமொழிப் பெயர்களாக மாற்றுவதும்,

அவற்றுக்குப் புராணக் கதைகள் எழுதுவதும் இடைக் காலத்திலேற்பட்ட வரலாற்று விபத்துக்களாகும்.

மாமல்லபுரத்தை மகாபலிபுரமென்பது மாபெருந்தவறு. பல்லவமன்னர்கள் ஆட்சியில் தமிழகம் சிக்கியபொழுது சமண மதம் இங்கு மேலோங்கியது. மகேந்திரர் சமற்கிருதப் பேரறிஞர். 'மத்த விலாசப் பிரகசனம்' எனச் சைவ சமயத்தைக் கிண்டல் செய்து நாடகம் ஒன்றை வடமொழியில் எழுதியவர். சமற்கிருதம் ஆட்சிமொழியாய்க் கோலோச்சியது. 'பரிவாதினி' என வீணை ஒன்றை இசைத்த பெருமைக்குரியவர். தமிழக யாழ், பெயர்தவிர, இல்லாது மறைந்தது இவர் காலத்தேதான். சமணம் வைதிக வேதாந்த வேள்விக்கொலைகளைத் தடுக்கப் பிறந்த அன்பு மதம்; கருணைமதம். ஆயினும் வேற்றுமொழி, பண்பாடு, கடும் விரதங்கள் காரணமாக வெறுக்கப் பெறலாயிற்று. திருநாவுக்கரசர் சிவனியத்தை வைத்துத் தமிழ்மொழியை நிலைநாட்டச் செய்த புரட்சி, தமிழ்மொழி, இன விடுதலை வரலாறாகும். திருஞான சம்பந்தர் என்ற தளபதியும் சேர்ந்தார். பௌத்த, சமண மதங்கள் வேதாந்த வேள்விக் கொலைஞர்களைத் தடுத்து நிறுத்தத் தோன்றியவை. ஆயினும் சாதுரியமாகத் தமிழக நிலவழிச் சமயங்களாகிய சிவனியம், மாலியம் இரண்டும் தமிழ்ப் பண்பாட்டில் ஊறியவையாதலின் இக்கொலை வேள்வி வித்தகர்கள், தமிழகச்சமயங்களோடு 'கொள்கையில்லாக் கூட்டணி' அமைத்து, அப்புறச் சமயங்களை விரட்டியடித்தனர்.

அப்பரும் சம்பந்தரும் 'நாளும் இன்னிசையால் தமிழை நிலைநாட்டினர்'. ஆனால் எந்தப் பக்தி

இயக்கத்தால் தமிழ் காக்கப்பட்டதோ, அதே பக்தி இயக்கத்தை வைத்துத் தமிழை அழிக்கும் வேலையே தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இன்று 'பக்தி'யை வைத்து, தமிழைத் திருக்கோயில் கருவறைக்குள் நுழைய விடாத வேதாந்திகளுக்கும் கோயில்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

தமிழகக் கோயிற்பெயர்கள், இறைவன் இறைவி பெயர்கள் எல்லாமே சமற்கிருதமாக்கப்பட்டன. இக்கொடுமைகளைச் செய்பவர்கள் இன்றும் தமிழையும் தமிழினத்தையும் மூளைச் சலவை செய்யப் பக்தியைப் பயன்படுத்திக் கொள்வது கொடிய பாவச் செயலாகும்.

இவ்வளவும் எழுதியது 'மாமல்லன்' எனும் சிறப்புப் பெயர் பெற்றவனும் மகேந்திரப் போத்தரையரின் மகனும் நரசிம்மப் பல்லவன் எனும் இயற் பெயருக்குரியவனுமான ஒரு பேரரசன், தன் காலத்திலேயே முழுத் தமிழனாக மாறி, தமிழகப் பண்பாட்டு நீரோட்டத்தில் கலந்து போனதை நினைவூட்டவே ஆகும். அதனால் மாமல்லன் என அழகிய தமிழ்ப் பெயரேற்ற அம்மன்னன் தமிழகச் சிற்பிகளைக் கொண்டு கட்டிய கடற்கரைச் சிற்பமாநகர்க்கு மாமல்லபுரம் என்று பெயரிட்டான். அதன்படி அழைக்காது, பொருந்தாத கதைகளைச் சொல்லி மகாபலிபுரம் என்றே அழைப்பது எத்துணைக் கொடுமை? இந்த ஊர் மட்டுமன்று. தமிழகத்தில் சமற்கிருத மயமாக்கிய அனைத்தையும் மீண்டும் முன்னைய தமிழ் மயமாக்கி மீட்டுருவாக்க வேண்டும். அதற்காகவே அடிக்கடி நேரும் பிழைகளில், இம்

மாபெரும் பிழை இவ்வளவு விரிவாக எடுத்துச்சொல்லப் பெற்றது. இது 'மாமல்லை' என்றே பாடல் பெற்றுளது.

## 47 தேநீர்

தே+இலை. Tea-தே எனப்பட்டது. தமிழாக்கச் சொல்.

தேன், தேம், தீம் என்பன இனிமை எனப் பொருள்படுவன. இது 'தேமொழி' எனப்படும்போது தேன்+மொழி ஆகும். 'தே' எனும் வேர்ச்சொல்லை வைத்து, தே+இலை என்றனர். அதனிலிருந்து வடிக்கும் நீரைத் தேநீர் என்றனர். இதைத் தேனீர்க்கடை என எழுதிவைப்பது தவறு. தேநீர்க் கடை எனலே சரியான வடிவம். பிறமொழிச் சொல்லைத் தமிழாக்கம் செய்வது எப்படி என்பதற்கு இது தகுந்த எடுத்துக்கட்டுமாகும். தேனீர்க்கடை என்றால் தேன் + நீர் + கடை = இனிய நீர்க்கடை. அங்கு தேயிலை நீர் கிடைக்காது. எனவே தேநீர்க் கடை என்பது பொருள் பொருத்தமுடையது.

## 48 அருவருப்பு

காலில் படத்தகாதது பட்டுவிட்டால் அருவருப்பாக இருக்கும். பல நாள் குளிக்காதவன் பக்கத்தில் வந்தால் வியர்வை நாற்றம் அருவருப்பாக இருக்கும். அருவருத்தலால் முகம் சுளித்து, வெறுத்துப் புறம் போகத் தோன்றும், அதற்காக இதைச் சிலர் அருவெறுப்பு என எழுதுவது தவறு. அருவெறுப்பு என்று ஒரு சொல் இல்லை. இவ்வாறு பிழைபட எழுதுவதைப் பார்க்கும் போது நமக்கு அருவருப்பாக இருக்கிறது. நம்

அரசியல் வாதிகள், அதிகாரிகள், அமைச்சர்கள் அனைவரும் ஊழலின் உச்சத்தைத் தொட்டு, மானத்தை உதறிவிட்டுத் 'தலைமை தாங்குபவர்களாய்'ப் பவனி வந்து, ஊருக்கு உபதேசம் பேசுவதையும் எழுதுவதையும் பார்த்து உலகம் அருவருக்கின்றது. 'கண்ணுக்குள் தூசி விழுந்தால் ஏதோ அருவுவதுபோல் இருக்கும். அராவுதல், அருவுதலிலிருந்து அருவருப்பு - உள்ளத்துள் ஏற்படும் அருவுவது போன்ற ஒருவித வெறுப்புணர்வு, சொல்வடிவம் பெற்றுளது. அதை அருவருப்பு என்றே எழுத வேண்டும்.

## 49 என்றன்

இச்சொல் இலக்கியப் படைப்பாளி முதல் அனைவராலும் 'எந்தன்' என்றே சொல்லி, எழுதிப் பழக்கப்பட்டு விட்டது. என்றன் - ஒருமை. எந்தம் - பன்மை. 'என்றன் இடது தோளும் கண்ணும் துடிப்பதென்ன - இன்பம் வருகுதென்று சொல் சொல் கிளியே' என்று பாட வேண்டும். எந்தன் தோள் என்பது பிழை. இது கற்றவரும் செய்யும் பிழை. ஒருமுறை காரைக்குடி அழகப்பர் கல்லூரியின் கலைவிழா ஒன்றில் கவியரங்கம் நடந்தது. பாவேந்தர் பாரதிதாசன் தலைமையில் எட்டுப் பேர் பாடினோம். யாருடைய பாடலிலோ எந்தன் என வந்துவிட்டது. அதை யாரும் கவனிக்கவில்லை. முடிவுரையில் என்றன் என்பதைப் பிழைபடப் பாடிய கவிஞரை, 'இலக்கணம் தெரியாதவனெல்லாம் கவியரங்கேறலாமா? என மிகக் கடிந்து பேசினார். பாவேந்தர். இன்றுவரை அந்த 'எந்தன்' யாரென்று தெரியவில்லை! எல்லோரும்

'அடக்கம் அமரருள் உய்க்கும்' என இருந்துவிட்டனர்! இதைப்போலவே உந்தன் என்பதும் தவறு. உன்றன் என இருக்க வேண்டும். உந்தம் என்பது பன்மை. என் + தன் = என்றன். எம் + தம் = எந்தம். உன் + தன் = உன்றன். உம் + தம் = உந்தம். இவை நந்தம் மொழியின் மரபு. கூடிய வரை தவறின்றிக் கட்டளைத் தமிழில் எழுதுவதே மொழியைக் காப்பாற்றும். என்றன் கருத்தன்று இது. தமிழின் இயல்பு இது. இதைத் தெரிந்துகொள்வதால் தவறில்லையே?

## 50 அன்று, அல்ல

அது அன்று; அவை அல்ல என்று வர வேண்டும். அது முறையன்று; அவை நல்லன அல்ல என்று சொல்ல வேண்டும். அவன் அல்லன்; அவள் அல்லள்; அவர் அல்லர்; அஃது அன்று; அவை அல்ல. இவையே மொழிச்செப்பமுடையவை. இப்போது எல்லாவற்றையும் 'அல்ல' ஆக்கிவிட்டோம். அதுநல்லதல்ல; அவன் நல்ல குணமுடையவன் அல்ல; அவள் அழகுடையவள் அல்ல; அந்த நாளிதழ் நல்லதல்ல; அவர்கள் சான்றோர்கள் அல்ல - இப்படி எழுதுகிறோம். இது அடிப்பழக்கமாகி விட்டது. இக்காலத் தமிழ் எழுத்து அனைத்திலும் இடம்பெற்றுவிட்டது. ஆனாலும் தவறு தவறே; பிழை பிழையே. 'நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே'. 'டாக்டர்' பட்டத்திற்கான முனைவர் ஆய்வேடுகளிலாவது, இக்கட்டளைத்தமிழ் பின்பற்றப்பட வேண்டும். தமிழாசிரியர்களாவது மரபை மீறாதிருக்க வேண்டும். ஏனெனில், தவறுவது நல்லதன்று; பிழைகள் பின்பற்றத் தக்கன அல்ல; அவ்வாறு எழுதுபவர் தமிழ்

கற்றவர் அல்லர்; அங்ஙனம் பிழைபட எழுதுபவன் தமிழறிஞன் அல்லன்; அவர்கள் தமிழ்ச் சான்றோர் அல்லர்.

அல்ல அல்ல நாங்கள் எழுதுவதே தமிழ் என்று நீங்கள் சொன்னால், அன்று அன்று நீங்கள் எழுதுவது நல்ல முறையன்று என்றே சொல்ல வேண்டியிருக்கும்.

## 51 அன்றியும் இன்றியும்

சட்டங்களை வகுப்பதன்றியும் அவற்றை நடைமுறைப் படுத்துவதும் முக்கியம். தமிழும் ஒரு தேசிய மொழி எனும் மதிப்பு மட்டுமன்றியும் அதன் வடமொழிக்கிணையான தொன்மையும் வளமையும் இந்தித் தேசிய வாதிகளால் உணரப்படவேண்டும். தமிழுணர்வைச் சிறையிலடைப்பதன்றியும் தமிழையே அழித்துவிடும் நோக்கமும் தீவிர மதவாதச் சக்திகளிடம் காணப்படுகின்றன. ஈழத் தமிழர்கள் சித்திரவதை செய்யப்படுவதைக் கருத்திற் கொள்ளாதது மட்டுமன்றி, அவ்வாறு வதைப்பவர்களைக் கைகொடுத்து வரவேற்றது நமது நடுவணரசு. இங்கெல்லாம் அன்றி (அல்லாமலும்) என வந்திருப்பதே சரி. இங்கெல்லாம் 'இன்றி' எனப் போடுகிறார்கள்.

அன்றியும் என்பது அல்லாமலும் எனப் பொருள்படும். இன்றியும் - இல்லாமலும் என்றாகும். அவர் நல்லவராக மட்டுமின்றி, வல்லவராகவும் இருக்கிறார் என்பது தவறு. நல்லவராக மட்டுமன்றி வல்லவராகவும் இருப்பதே நல்லது.

இவ்வாறு 'அன்றி' என வரவேண்டிய இடங்களில் 'இன்றி' என எழுதும் பழக்கம் தவறு. இது அடிக்கடி நாளிதழ்களில் காணப்படுகிறது.

சட்டங்களை வகுப்பது மட்டுமின்றி அவற்றை நடைமுறைப்படுத்துவதும் வேண்டும். இங்கு இன்றி என்பது தவறு. தமிழின் பெருமையை உணராமை மட்டுமின்றி, அதை அழுத்தப் பார்ப்பது இந்திய ஒருமைக்குக் கேடு தரும். திராவிட இயக்கம் தீவிர மதவாதத்திற்குப் பதவி ஆசை காரணமாக, மண்டியிட்டது மட்டுமின்றி, கொள்கையையும் இழந்தது. இவ்வாறு 'இன்றி' போடுவது தவறு. வகுப்பது மட்டுமன்றி - உணராதது மட்டுமன்றி - மண்டியிட்டது மட்டுமன்றி - என இவற்றைத் திருத்த வேண்டும்.

உப்பு இன்றிக் குழம்பு வைக்கலாமா? உணவின்றியும் போகலாம்; உடையின்றிப் போகமுடியுமா? மெட்ரிக்குப் பள்ளிகளில் தமிழ்மொழிப் பாடம் அறவே இன்றிப் போனது. இதற்கு ஆள்பவர் உணர்வின்றிப் போனதே காரணம்.

அன்றி - அல்லாமல். இன்றி - இல்லாமல். இன்றி - இல்லாது போய்விடுவதை உணர்த்தும். கருத்தோடு கவனித்துப் படித்தீர்களானால், நாளேடுகளில் இப்பிழை அடிக்கடி காணப்படும். அதை நீக்குவதன்றியும் செவ்விய முறையில் மேன்மேலும் எழுத வழிகாட்டுவதும் நமது கடமையாகும்.

## 52 கரியும் கறியும்

கரி வேறு, கறி வேறு. அடுப்புக்கரி நெருப்பெரிக்க உதவும். ஆட்டுக்கறி உணவாகும். ‘கரி’ வாங்கி வா என்றால், ஆட்டுக்கறியை வாங்கி வந்தால், இதுகள் அதைத் தின்னுமா? தமிழில் ரகர, றகர வேறுபாடு போய் நெடுநாட்களாகிவிட்டது என்று ஒரு மொழியியல் அறிஞரும், கரிசல்காட்டுப் பெரும் படைப்பாளிகளும் சொன்னது நினைவிற்கு வருகிறது. இவை ‘கரி’ என்ற பெயரால், கறியைத் தின்னுமே தவிர, வேறுபாடில்லை என்று கரியையே தின்னுமா? ர,ற வேறுபாடு ல, ள, ழ வேறுபாடு ந, ன, ண வேறுபாடு யாவும் வேண்டாம் என்பது முறையாகுமா? ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் வேண்டாதவை, கடினமானவை உள. வழக்கிலுள்ளதை வேண்டாமெனில் அங்கு வதைத்து விடுவர். இங்கு அவர்களை யாரும் கண்டிப்பதில்லை. இப்பொழுது சொல்லுங்கள்! இலக்கணம் எழுதிய சான்றோர்கள் நம் பகைவர்களா? அல்லது அதன்படி பேசுவதும் எழுதுவதும் மொழிவெறியினாலா?

**‘தமிழ்ப் பகையே வெளியேறு - எங்கள் தமிழை வாழவிடு!** என்று எங்கெங்கும் எழுதி வையுங்கள்; முழக்கமிடுங்கள்.

## 53 பிட்டுத்திருவிழா

மாணிக்கவாசகர் வரலாற்றை ஒட்டிப் பிட்டுத்திருவிழா ஆவணி மாதம் ஆண்டுதோறும் நடைபெறுகிறது. மதுரையில் முக்கியமான விழாக்களில்

ஆவணிமூலத் திருவிழாவும் ஒன்று. ஆவணிமூலத் தெரு நான்கு, மதுரை ஆலவாய் அண்ணல் அங்கயற்கண்ணி கோயிலைச் சுற்றி உள்ளன.

நாளிதழ்கள் எல்லாம் இதைப் புட்டுத் திருவிழா என்றே வெளியிட்டன. பிட்டு என்பது ஒரு சிற்றுண்டி வகை. 'மதுரையில் பிட்டமுது செய்தருளி' *(13,16)* என்பது திருவாசகம். வைகையில் பெருகிவந்த வெள்ளத்தை அடைக்க அக்காலத்தில், சிவபெருமானே கூலியாளாக வந்து, வந்தி என்ற பிட்டுவிற்ற கிழவியிடம் கூலிபேசி, அவளுக்குரிய பங்குக்காகக் கூடை மண் எடுத்துப் போட்டனராம். இதைப் பிட்டுக்கு மண்சுமந்த படலம் எனத் திருவிளையாடற் புராணம் கூறும். பேச்சில் பிட்டு, புட்டாகிவிடுவது ஒலித்திரிபு. மாவாக்கி, நீராவியில் வேகவைக்கும் பிட்டு, பிட்டுத் தின்னச் சுவையாக இருக்கும். செடியைப் பிடுங்குதல், பொருளை இருகூறாகப் பிளத்தல் - பிட்டுவைத்தல், வாதத்தில் கருத்துக்களைப் பிட்டுப்பிட்டு வைத்தல் என வழங்குவன காணலாம். அதைப் புட்டென்பது பொருளற்றது.

## 54 ஐந்நூறு

ஐந்தும் நூறும் சேர்ந்தால் ஐந்நூறு என்று வரும். வருமொழி நூறு. அதில் முதல் எழுத்து ந் + ஊ. இவை சேரும்போது அந்த 'ந்' மட்டும் மிகவேண்டும். ஏன்? பொருளுணர்ச்சிக்காக. ஐ நூறு என்றால் ஆச்சரியப்படும் நூறு எனப் பொருள்படும். 'ஐ' - வியப்பை உணர்த்தும் உரிச்சொல். ஐந்தில் உள்ள ஐ வேறு.

இந்திய அரசு வெளியிட்டுள்ள பணத்தாளில் 'ஐநூறு' எனத் தவறாக உளது. பேராசிரியர் மா.நன்னன் இதைத் தொடர்புடையவர்களுக்கும் இதழ்களுக்கும் எழுதிஎழுதிக் கை ஓய்ந்ததுதான் மிச்சம். நம் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் யாரும் கண்டுகொள்வதே இல்லை.

அதில் Five Hundred என்பதை Fiv என்றாலே, அதே ஒலி கிடைக்கிறதே என்று எடுத்துவிடலாமே? ஒரு தமிழ்ப் பேராசிரியர் 'ஒப்பாரி ஐநூறு' என வெளியிட்டுள்ளார். நகரத்தார் ஒன்பது கோயில்களில் ஒன்றான, மாத்தூர் ஐந்நூற்றீசுவரர் மாறாமல் இருப்பது, அவர்தம் திருவருளால் என மகிழலாம். ஐந்நூறு என்று போடுமாறு நடுவணரசுக்கு ஐந்நூறு அஞ்சலட்டையாவது எழுதுங்கள்.

## 55 பழைமையும் பழமையும்

ஐ, ஔ என்பன நெட்டெழுத்துக்கள். இரண்டு மாத்திரை உடையன. சிலபோது ஒன்றரை மாத்திரை போலக் குறுகியும் ஒலிப்பன. செய்யுளில் இவை குற்றெழுத்துப் போலவும் நெட்டெழுத்துப் போலவும் அசைக்கு அலகு (ஒலிஅளவு) கணக்கிடப்பட்டன. ஏன்?

பழைமையை நாம் பழமைபோலப் பேச்சில் ஒலிப்பதுண்டு. ஔவையாரைச் சிலர் அவ்வையார் என எழுதுவர். அப்போது நெடிலோசை குறையும். உலக வழக்கில், ஒலிக்கும் முறையால்தான் இவை இவ்வாறு கணக்கிடப்பட்டன.

பழைமை என்பதே மூலச்சொல். பழைமை என்று பலகாலம் பழகிய நட்புரிமையைப் பற்றி ஓர் அதிகாரத்தில் (81) திருவள்ளுவர் விளக்குகிறார். அதைப் பழமை என எழுதுவது தவறு. ஆனால் அடைமொழியாக மாறும்போது பழஞ்சோறு, பழங்குடி, பழமொழி, பழஞ்செய்க்கடன், பழவினை, பழமழை எனவரும்.

பழையன் என ஒரு சிற்றரசன் இருந்தான். பழையோள் என்று துர்க்கை குறிக்கப்பட்டாள். மிகப் பழையது, பழையர், பழையோர், பழைய பாண்டம் என வருமிடங்கள் உள. பழைய பாண்டத்தைப் பழம்பாண்டம் எனலாம். பழைய பாடலைப் பழம்பாடல் எனலாம். அடைமொழியாக வருவது வேறு; பழைமை எனும் பண்புச்சொல் வேறு. பழைமையே அடைமொழியாகும் போது பழைம் பாடலாகாது பழம்பாடலாகிறது.

பழைமை - ஒலிப்பில் குறுகுமிடமும் உள என்பதால், மாத்திரை அளவு குறுகுமே தவிர - அதைப் பழமை என எழுதுவது தவறு. பழைமை எனும் சொல் பழங்காலந்தொட்டுப் பழைமை என்றே எழுதப்பட்டு வருகிறது. பழைமை பாராட்டுவோம்; பழந்தமிழ் மரபைக் காப்போம்.

## 56 உடைமை

உடைமை ஒருவருக்குரிமையுடையது. திருவள்ளுவர் அடக்கமுடைமை, அறிவுடைமை, அருளுடைமை, ஒழுக்கமுடைமை, பண்புடைமை என

மனிதனை விட்டுப்பிரிக்க இயலாத உடைமைகள் பலவற்றைக் கூறியுள்ளார். செல்வமும் ஓர் உடைமையேயாயினும் அது 'நில்லாது நீங்கிவிடும்! இதனைச் சிலர் 'உடமை' என்றே அடிக்கடி எழுதி, அச்சிட்டு, வெளியிடக் காண்கின்றோம். உடையார், உடையாய், உடையோன் என வரும் இதனை உடமை எனல் தவறு. ஐகாரக் குறுக்கம் செய்யுளில் ஓசை கருதிக் கணக்கிட வருவது. பேச்சில் சிலசமயம் உடைமையை அழுத்திச் சொல்லாமல் உடமை எனச் சிலர் சொல்லிவிடுவர்; பழமை எனவும் பேச்சில் கூறிவிடுவர். அவை பேச்சிலேற்படும் ஒலித்திரிபு. சோம்பலின் விளைவு. Hour என்பதை our என்பதுபோலவே ஒலிக்கும் ஆங்கிலேயன் H எழுத்தை, எழுதும்போது விடுவதில்லை. whole 'ஹோல்'. 'w' ஒலிக்கவில்லையே. எழுதும்போது விடலாமா? ஒருவனுக்கு உடையதாவதை, உடமை எனச் சொன்னால், அது அவனுடையதாகாது. பேச்சில் ஒருவருக்கு ஒருவர், வட்டாரத்திற்கு வட்டாரம் ஆயிரம் ஒலித்திரிபுவரும். ஆனாலும் கட்டளை மொழியே மூலத்திருவடிவம். அதனை இழந்தால், 'மரபு திரியின் பிறிது பிறிதாகும்'. தமிழ்ச் சொற்களைப் போலச் சொற்கட்டமைப்பும் பொருளமைப்பும் இயைந்தவை - ஒட்டுநிலை தவறாத முழுவடிவுடையவை - உலகில் பிறமொழிகளில் காண்பதரிது. அவற்றைச் சிதைப்பது நம் உடைமையை இழப்பதாகும்.

## 57 அடைமானம்

ஒரு பொருளை அடைவாக வைத்து - அடைவு வைத்துப் பொருள் பெறுகிறோம். 'அடைவு' என்பது நாம் பெறும் பொருளைத் திருப்பித் தருவதற்காகக் கொடுத்து வைப்பது. மானம் - இறுதிஒட்டு. பெறுமானம் பார்த்தே அடைமானப் பொருளுக்குப் பதிலாகப் பணம் தருவார்கள். வருமானம் குறையும்போது அடைமானம் வைக்கநேரும். அடைமானம் வைத்துப் பொருள் தரும் கடை 'அடைவுக்கடை' அதை, அடவுகடை, 'அடகுகடை' எனல் தவறு; அடகு வைத்தோர் என்பதும் தவறு; அடகுச் சீட்டும் - தவறு. முன்சுட்டிய ஐகாரக் குறுக்கம் பேச்சில் நேர்வது; செய்யுளில் ஓசையளவைக் கணக்கிட வருவது. ஆனால் எழுத்தில் - கட்டளைத் தமிழில் அடைமானம்; அடைவுக்கடை, அடைவுச் சீட்டு, அடைவுப் பொருள் என்றே எழுதவேண்டும். தமிழையே அடைவு வைத்துப் பதவி, பணம், பரிசு திரட்ட நாளும் மோப்பம் பிடிப்பவர்களால் தமிழை மீட்க இயலாது. அவர்கள் தமிழை மேன்மேலும் அடைவு வைக்கவே முந்துவார்கள். அவர்கள் அடைவு வைத்தவற்றையும் மீட்கும் கடமை, பணி நம்முடையதேயாகும்.

அடைமானம் என்பதை 'ஈடுவைத்தல்' என்பதுண்டு. அடைவு - ஈடு. அதாவது சம மதிப்புடைய தங்கமோ, வெள்ளியோ, பிறிதொன்றோ கொடுத்துப் பணம் பெறுவது. இதனோடு தொடர்புடையன ஒற்றிவைத்தல், ஒற்றிக்கு விடுவது என்பன. இதனையும் 'ஒத்தி' என்ற பேச்சுவழக்காகவே மாற்றி எழுதுகின்றனர். சுந்தரமூர்த்தி நாயனார், தேவாரத்தில் சிவபெருமானிடம்

'ஒற்றியூர்ப் பெருமானே! உம்மை ஒற்றிவைத்து உண்ணலாமோ? உதவாதிருக்கின்றீரே' என நகைச்சுவை படக் கேட்குமிடமும் ஒன்றுண்டு. எனவே எழுத்தில் 'ஒற்றி' என்றே எழுதவேண்டும். வருவாய்க்குள் செலவு செய்தால் 'அடைமானம்' வைக்கும் பழக்கம் ஏற்படாது.

## 58 புழைக்கடை

இதைப் புழக்கடை என்பது தவறு. புழை என்பது சிறுதுளை, சிறியவாயில், சிறுதுவாரம், குழாய், நீரோடும் வழி எனப் பொருள் வளர்ச்சி பெற்ற சொல். சங்கப் பாடல்களில் 'புழை' - தினைப்புனங்களின் வேலியில் சிறுவாயில்போல் உள்ள இடம். புழல் - உள்துளை. பிற்பாடு குளிர்ப்பதாலும் பிறவாறும் ஓடும் நீரை, அப்புறப்படுத்த வீட்டின் பின்புறம் அமைத்த, குழாய் வடிவான, சிறிய வாய்க்காலைக் குறித்தது. பின்புற வாயிலையும் குறிப்பதுண்டு. புழைக்கடை வழியாகச் சாய்க்கடை வீட்டை விட்டு வெளியேறும். கழிவு நீர் அகற்றும் புழைக்கடை பேச்சில் புழக்கடை ஆனது; சாய்க்கடை சாக்கடை ஆனது. இரண்டும் புழைக்கடையாகவும் சாய்க்கடையாகவும் ஓடினால் தான் தீயநாற்றம் விலகும். இவ் விருவகைக் கழிவு நீரையும், புதை சாய்க்கடை வழியாக, குழாய்கள்மூலம் நகருக்கு வெளியே அகற்றுவர்.

## 59 மடைப்பள்ளி

கோயில்களில் மடைப்பள்ளி உண்டு. அங்கு 'சோம்பாயி' என்ற பிராமணர் இறைவனுக்கான பூசைக்குரிய உணவு முதலியவற்றைச் சமைத்துத்

தருவார். இறைத்திருமேனி உள்ள கருவறைக்குள் நுழையக்கூடிய தகுதி, சிவபூசை செய்த சிவதீக்கை பெற்றவர்களுக்கே உண்டு. இவர்கள் குருக்கள், பட்டர்கள், சிவாச்சாரியர்கள், ஆதி சைவர்கள் எனப்படுவர். இவர்களை மறைமலையடிகள் தமிழர் வழிவந்த தமிழர்கள் என்பார். மிகப்பல கோயில்களில் மடைப்பள்ளி என்பதை, மடப்பள்ளி என்று எழுதிவைத்துள்ளார்கள். இது உள்ளே வேலை பார்ப்பவர்களை அவமதிப்பதாகும். மடை எனும் சொல் பல பொருளுடையது. அதில் ஒன்று சமையல்தொழில் என்பது. மடை என்பது சோறு என்றும் தெய்வத்திற்குப் 'பலி' யிடும் உணவு என்றும் பொருள்படும். எனவே மடைப்பள்ளி என்பதே சரியானது.

மடம் எனும் சொல்லுக்கும் பல பொருளுண்டு. அதில் ஒன்று 'அறியாமை' என்பது. மடவோன், மடவோர் என்பன பழஞ்சொற்கள். மடவன் என்பதும் சரியான சொல். 'மடயன்' என வழங்குவர். வழக்கில் 'மடப்பயல்' என்று திட்டுவர். மடையன் எனத் திட்டுவது, நாம் உண்ண உணவு தரும் மடைத்தொழிலைப் பழிப்பதாகும்.

கோயில்களில் மட்டுமே மடைப்பள்ளிகள் உள்ளன. அடுக்களை, அடுப்படி, சமையலறைகளை மடைப்பள்ளி என்பதில்லை. இப்பொழுது எல்லோரும் 'கிச்சனுக்குள்' சிக்கித் தவிக்கிறார்கள்.

## 60 உடம்பாடு

இதனை 'உடன்பாடு' என மயங்கக் கூறுதல் பெருவழக்காகவுளது. உடம்பாடும் உடன்பாடும் நுட்பமாக வேறுபட்ட சொற்பொருளுடையன. உடன்பாடு புணர்ச்சியால் உடம்பாடு ஆயிற்று என்பது சிலர் கருத்து. நுட்பமாய்ப் பார்த்தால் 'உடம்புடன்' தொடர்புபடுகிறது.

உடம்படல் - சம்மதப்படுதல், இசைதல். உடம்படிக்கை - அதை உறுதிசெய்தல். 'உடம்பாடிலாதவர் வாழ்க்கை' - மனம்பொருந்தாதவர் கூடிவாழ்தல்' (குறள் 890). பழைய இலக்கியம் முழுவதும் உடம்பட்டான், உடம்பட்டு, உடம்படுநர், உடம்படுவி என்றே இது ஆளப்பெறுகிறது. உடம்பு அடுவி - உடம்பிற்கு உயிர் போன்று இசைந்தவர் என்பது பொருள். உயிரெழுத்துக்களைச் சேர்க்கும் மெய், உடம்படுமெய்.

உடன் - ஒருங்கு, முழுவதும், ஒன்றுசேர்தல். உடன் வாழ்பகை (உட்பகை), உடன் ஆடு களம் (சேர்ந்து விளையாடுமிடம்), உடன்பிறப்பு என வழங்கும்.

உடன்பாடு, உடன்படுதல் - ஒன்று சேர்தல், ஒருவர் சொன்னதை மற்றவர் ஏற்றுக்கொள்ளுதல்.

உடம்புக்கு உயிர்போலப் பொருந்துதலை உடம்பாடு குறிப்பதால் அது உடன்பாட்டுடன் உடம்படவில்லை.

உடன்பாடுதான் உடம்பாடு ஆயிற்று எனச் சிலர் விளக்குவது தவறு. பழந்தமிழ்ப் பாடல்கள் இவற்றைச் சற்று நுட்பமாக வேறுபட ஆள்கின்றன. உடம்பாடுதான் காலப்போக்கில், பொருள் பொருத்தமிருப்பதால் உடன்பாடென ஆளப்பட்டு விட்டது.

உடம்படிக்கை, உடம்பாடு ஏற்பட்டது, உடம்பட இசைந்தனர், உடம்படவில்லை என எழுதுவதே செவ்வியலாகும்.